# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 53 — 1973 මාර්තු 30 වැනි සිකුරාදා — 1973.03.30

53 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப்பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. .. | 229 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | 229 |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் .. | 230 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. . | 231 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | 233 |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. . | 234 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 243 |
| மாறுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 195

எண் : டி./வி.எஃவ்/78

**தரைப்படை—எஸ். எல். வி. எஃவ்.— அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அரசாணையமர்வுப் பிறக்கீடு**

1973, மாச்சு 13 ஆம் திகதிமுதல் அரசாணையமர்வுப் பிறக்கீடு :—
லெஃவ்ரினன்ற் புலத்சிங்ஹலகே நோர்பேர்ற் பெரேரா, என். எஸ். ஆர்.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 16 ந் உ.

3–1274—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

1973 இன் இல. 196

எண் : டி. 387/ஆர்.ஈ.சி.ரி.

**இலங்கை வான் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணையமர்வு துறத்தல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1973, ஏப்பிறல் 30 ஆம் திகதி தொடக்கம் அரசாணையமர்வு துறத்தலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் :—

ஃபிளைற்–லெஃவ்ரினன்ற் நிஹால் சிட்னி குருசிங்ஹ (01145)—(வைத்திய).

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 9 ந் உ.

3–1132—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

# நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 197

**அரசியலமைப்பின் 126 (5) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையால் தமக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளரினூற் செய்யப்பட்ட பதில் நியமனங்கள்**

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எம். டி. ஜேசுரட்ணம் | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு .. | 1973 மார்ச் 1 விருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஏ. பி. அனுவிகார .. | அதிகப்படியான அலுவலர், பதில் இணை நீதவான் முதலியன, பதுளை | ஷ | ஷை |
| திரு. வை. எச். குணரட்ண | அதிகப்படியான அலுவலர், பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கண்டி ; மாத்தளையில் | ஷ | ஷை |
| ஷை .. | அதிகப்படியான அலுவலர், பதில் இணை நீதவான் முதலியன, அவிசாவளை | 1973 மார்ச் 19 விருந்து | ஷை |
| திரு. எம். சற். ஐ. அசீஸ் | பாணந்துறை பதில் இணை நீதவான் முதலியன, ஹோறணை | 1973 மார்ச் 5 விருந்து | ஷை |
| ஷை .. | அதிகப்படியான அலுவலர், பதில் இணை நீதவான் முதலியன, நீர்கொழும்பு | 1973 மார்ச் 19 விருந்து | ஷை |
| திரு. பி. எதுஸ்சூரிய .. | அதிகப்படியான அலுவலர், பதில் இணை நீதவான் முதலியன, மாத்தறை | 1973 மார்ச் 1 விருந்து | ஷை |
| திரு. ரி. ஜே. ருஜரட்ணம் | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பருத்தித்துறை, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 13 விருந்து | பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற 3167, 8960, 9199, 9700, 9823 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| திரு. எஸ். சேமசிங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 16 விருந்து | கொழும்புக் கோட்டை கூட்டுநீதிமன்ற 4897[9] இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| திரு. ஏ. எஸ். விஜதுங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, மாத்தறை, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 8 விருந்து | மாத்தறை நீதிமன்ற 57280 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. சி. ஆனந்த கிரேரோ | பதில் இணை நீதவான் முதலியன, கொழும்பு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 24 விருந்து | கொழும்புக் கோட்டை கூட்டுநீதிமன்ற 24131, 40119, 19066, 45710/என்எஸ், 38246 ஆகிய இலக்க வழங்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எல். பி. ககற்றப்பிற்றிய | பதில் இணை நீதவான் முதலியன, களுத்துறை | 1973 மார்ச் 22, 23 | திரு. ஏ. சைமன் சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஓ. எம். தாகிர் | பதில் இணை நீதவான் முதலியன, குருணகல் | 1973 மார்ச் 9, 10 | திரு. என். பி. டி. எஸ். விஜசேகர இல்லாத காலங்கள் |
| திரு. சேபால சமரசிங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, மாத்தறை | 1973 மார்ச் 1, 9, 10 | திரு. எஸ். ஜே. டி. த எஸ். விஜயரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. கே. டி. சேனவீர .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, அனுராதபுரம் | 1973 பெப்புருவரி 26 | திரு. டபிள்யு. பி. என். த சில்வா இல்லாத காலம் |
| திரு. ஆர். விக்ரமசிங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, காலி .. | 1973 பெப்புருவரி 8, 9 | திரு. ஜே. சேனுதிருஜா இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. ஜே. அந்தணி பெர்னண்டோ | பதில் இணை நீதவான் முதலியன, பாணந்துறை | 1973 பெப்புருவரி 28 | திரு. பி. பி. ரம்புக்வெல்ல இல்லாத காலங்கள் |
| திரு. டி. சி. த சில்வா .. | ஷை | 1973 மார்ச் 5 .. | ஷை |
| திரு. பிரிட்ஸ் கோதாகொட | பதில் இணை நீதவான் முதலியன, குருணகல் | 1973 பெப்ருவரி 26 | திரு. எம். எஸ். எஸ். கொரியா இல்லாத காலம் |
| திரு. கோடன் கோதாகொட | ஷை | 1973 மார்ச் 2 .. | ஷை |
| திரு. எல். டபிள்யு. பெர்னண்டோ | கண்டி பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கம்பளை | 1973 பெப்ருவரி 24, 25, 27 | திரு. ஆர். எல். த சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. சி. ஈ. எம். முத்துக்கிருஸ்ண | கொழும்பு பதில் இணை நீதவான் முதலியன, போக்குவரத்துமன்று, நாரகென்பிட்டி | 1973 பெப்ருவரி 19, 22, மார்ச் 2 | திரு. எல். எஸ். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. ரி. ஏ. கீர்த்திநந்த .. | ஷை | 1973 பெப்ருவரி 20, 28 | ஷை |
| திரு. எம். எச். கரீம் .. | ஷை | 1973 பெப்ருவரி 21, மார்ச் 1 | ஷை |
| திரு. ஜே. சி. ருஜரட்ணம்.. | நுவரெலியா பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, அட்டன் | 1973 மார்ச் 7, 8 | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. என். எஸ். சி. அழகமுத்து | ஷை | 1973 மார்ச் 10 .. | ஷை |
| திரு. எம். ஈசுரபாதம் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பருத்தித்துறை | 1973 பெப்ருவரி 27, 28 | திரு. கே. பாலசிட்னர் இல்லாத காலங்கள் |
| திரு. பி. வி. பாலசிங்கம் .. | யாழ்ப்பாணம் பதில் இணை நீதவான் முதலியன, மல்லாகம் | 1973 பெப்ருவரி 25 விருந்து 28 .. | திரு. எம். டி ஜேசுரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. என். ஏ. ருஜரட்ணம் | பதில் இணை நீதவான் முதலியன, பருத்தித்துறை | 1973 மார்ச் 1, 2 | திரு. எஸ். ஜோகருதன் இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். சுரவீர .. | பதில் இணை நீதவான் முதலியன, கேகாலை .. | 1973 பெப்ருவரி 23, 24 | திரு. எம். பி. விஜசிங்க இல்லாத காலங்கள் |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எம். எம் ஹலால்தீன் | அனுராதபுரம் பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பொலனறுவை | 1973 மார்ச் 8 விருந்து 12 | திரு. டபிள்யு. என். எஸ். விஜரட்ண இல்லா லாத காலங்கள் |
| திரு. பி. விஜசிங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, கம்பக .. | 1973 பெப்ருவரி 26 | திரு. ரி. எம். வருசவிதான இல்லாத காலம் |
| திரு. பி. சிறி குணவர்த்தன | பதில் இணை நீதவான் முதலியன, கம்பக .. | 1973 பெப்ருவரி 28 | திரு. ரி. எம். வருசவிதான இல்லாத காலம் |
| திரு. டி. பி. ரணசிங்க .. | டிை | 1973 பெப்ருவரி 24, 27 | டிை |
| திரு. ஏ. அழகையா .. | மட்டக்களப்பு பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கல்முனை | 1973 மார்ச் 2 விருந்து 4 | திரு. ரி. சுந்தரலிங்கம் இல்லாத காலம் |
| திரு. ரி. குணரட்ண .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பாணந்துறை | 1973 பெப்ருவரி 26, மார்ச் 1 | திரு. கே. வி. சுவர்ணதிபதி இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம் | 1973 பெப்ருவரி 23, 26 | திரு. கே. சி. ஈ. த அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. டி. சேரசிங்க ... | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, தங்காலை | 1973 மார்ச் 23, 24 | திரு. ரி. என். அபேவீர இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. என். ஏத குரூஸ் | பதில் இணை நீதவான் முதலியன, நீர்கொழும்பு | 1973 மார்ச் 2 விருந்து 5 | திரு. எஸ். சேமசிங்க இல்லாத காலங்கள் |
| திரு. பி. டி. பெர்னன்டோ | பதில் தலைவர், தொழில்முறைமன்று .. | 1973 மார்ச் 17 விருந்து 27 | கொழும்பு தொழில்முறைமன்று (16) ன் 16/876/71, 868/71, 641/70, 1120/71, 503/70 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எஸ். தர்மலிங்கம் .. | டிை .. .. | 1973 மார்ச் 12 .. | கொழும்பு தொழில்முறை மன்று (13) ன் 13/என்/22 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பீ. ஓ. ஆர். விஜயதிலக்க | வடக்கு கிருவப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் இணைத்தலைவர், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 22 விருந்து 15 தினங்கள் | அம்பாந்தோட்டை ஊர்நீதிமன்ற 1870 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. கே. விக்னேஸ்வரன் .. | வலிகாமம் வடக்கு முதலியவற்றின் ஊர் நிதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 1, 2 | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. கே. குணரட்ணம் .. | டிை .. .. | 1973 பெப்ருவரி 26 விருந்து 28 | டிை |
| திரு. எஸ். வல்லிபுரம் .. | டிை .. .. | 1973 மார்ச் 5 விருந்து 7 | டிை |
| திரு. ஓ. ஏ. ஏ. தல்பதாடு | பிற்றிகல்கோறளை வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 மார்ச் 1 .. | திரு. பி. டி. பி. விஜசேகர இல்லாத காலம் |
| டிை | டிை | 1973 பெப்ருவரி 27 | டிை |
| திரு. இசற் ஏ. எம் தாசிம் | இணைக்காதி, கொழும்பு வடக்கு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 மார்ச் 17 விருந்து 15 தினங்கள் | கொழும்பு வடக்குக் காதிமன்ற 7016, 4346 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை.

நீதிச் சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச் சபைகள் அலுவலகம்,
த. பெ. 573,
சி/52, கெப்பிட்டிப்பொல வீதி,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 19 ந் உ.

3-1222—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

---

# மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 198

இலங்கைக் கணக்காய்வுச் சேவையில் பின்வரும் பதவியுயர்ச்சிகளைப் பிரதம மந்திரி அங்கீகரித்துள்ளார் :—

1973 சனவரி 10 ஆந் திகதி முதற் செயற்படக்கூடியதாக பதிற் பிரதிக் கணக்காய்வாளர் அதிபதி திரு. சி. சிவபாதசுந்தரம் பிரதிக் கணக்காய்வாளர் அதிபதியாகக் கடமையாற்றுவதற்கு.

1973 சனவரி 10 ஆந் திகதி முதற் செயற்படக்கூடியதாக மேற்கொண்டு பணித்தல்கள் விடுக்கப்படும்வரை, உதவிக் கணக்காய்வாளர் அதிபதி திரு. எஸ். டீ. ஏ. வால்ரர் பிரதிக் கணக்காய்வாளர் அதிபதியாகப் பதிற் கடமையாற்றுவதற்கு.

1973 சனவரி 10 ஆந் திகதி முதற் செயற்படக்கூடியத்தாக பதில் உதவிக் கணக்காய்வாளர் அதிபதி திரு. என். டீ. என். குணசேகர உதவிக் கணக்காய்வாளர் அதிபதியாகக் கடமையாற்றுவதற்கு.

1973 சனவரி 10 ஆந் திகதி முதற் செயற்படக்கூடியதாக மேற்கொண்டு பணித்தல்கள் விடுக்கப்படும்வரை, 1 ஆந் தரக் கணக்காய்வு அத்தியட்சர் திரு. ஜீ. துரைநாயகம் உதவிக் கணக்காய்வாளர் அதிபதியாகப் பதிற் கடமையாற்றுவதற்கு.

எம். டி. டி. பீரிஸ்,
பிரதம அமைச்சரின் செயலாளர்.

பிரதம அமைச்சரின் அலுவலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 19 ந் உ.

3-1135—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

1973 இன் இல. 199

பா 4/2/7.,
பா 4/2/14.,
பா 4/சாவி/நில 34.,
பா 4/1/7/27/72 (வா).,
பா 4/1/16/64/72 (வா).,
பா 4/1/35/121/73.

**நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்**

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 82, 83 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர் பீலிக்ஸ் றெஜினேல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான்,

1. கந்தசாமி சிவரத்தினம் அவர்களை யாழ்ப்பாணப் பிரதேச நீதிமன்றங்கள் நிருவாகச் செயலாளராகப் பதவி வகிக்கும் காலத்துள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை நீதிநிருவாக மாவட்டங்களுக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

2. சுப்பர் வேலாயுதர் அவர்களைக் கொழும்பு பகுதி இல. 1 பிரதேச நீதிமன்றங்கள் நிருவாகச் செயலாளராகப் பதவி வகிக்கும் காலத்துள் கொழும்பு, பாணந்துறை, கழுத்துறை நீதிநிருவாக மாவட்டங்களுக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

3. டீ. எஸ். கோட்டகே அவர்களைக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பதிவாளராகப் பதவி வகிக்கும் காலத்துள் ஸ்ரீ லங்காவின் (இலங்கையின்) எல்லா நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான ஒரு சமாதான நீதிவானுகவும்,

4. புஞ்சியப்புகாமி வனசிங்க அவர்களை அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் ஸ்ரீ லங்காவின் (இலங்கையின்) எல்லா நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான ஒரு சமாதான நீதிவானுகவும்,

5. எம். கே. எம். சமூன் அவர்களைப் பாணந்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

6. பக்கீர் மிதீன் அப்துல் கரீம் அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

7. பிற்றதுவ கமகே ஜோன் சிஞ்ஞோ அவர்களை மாத்தறை நீதி நிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

8. தேவசிறி விஜேசிறி ஜயவர்த்தன கருணுரத்தின வீரமன் அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

9. கீர்த்திபால ருவன்பதிரண அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

10. தொன் தாவித் குலதுங்க அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான ஒரு நீதிவானுகவும்,

11. டீ. எம். உக்குபண்டா அவர்களை வதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 மாச்சு 17 ஆம் நாள்.

3–1219/1—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**திருத்தம்**

1972.10.27 ஆந் தேதிய 31 ஆம் இலக்கச் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசுக் கசெற்றின் I ஆம் பகுதி : I ஆம் தொகுதியின் 363 ஆம் பக்கத்தில் 1972 இன் 208 ஆம் இலக்க அறிவித்தலில் 33 இல் குறிப்பிடப்பட்டுள்ள "கேவா தொண்டிலகே பீற்றர் " என்பதற்குப் பதிலாக " கேவா தொண்டிலகே பீற்றர் சிஞ்ஞோ " என்பதை இடுவதன் மூலமும்,

1972.12.29 ஆந் தேதிய 40 ஆம் இலக்கச் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசுக் கசெற்றின் I ஆம் பகுதி : I ஆம் தொகுதியின் 575 ஆம் பக்கத்தில் 1972 இன் 310 ஆம் இலக்க அறிவித்தலில் 51 இல் குறிப்பிடப்பட்டுள்ள " ரீ. பீ. ஹலங்கொட" என்பதற்குப் பதிலாக " ரீ. பீ. ஹலங்கொட " என்பதை இடுவதன் மூலமும்,

திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 மார்ச்சு 17 ஆம் நாள்.

3–1219/2—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

1973 இன் இல. 200

**நீக்குதல்**

(20 ஆம் அத்தியாயமான) குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சர் அவர்களால்,

பா 4/ஹமப 22/7.

1. கிரிபத்கல்கே மாசிரிஸ் சிஞ்ஞோ குணசேன அவர்களை இரத்தினபுரி மாவட்டத்தின் குறுவிற்ற கோரளையின் கிலீமலைப் பகுதிக்கெனத் திடீர் மரண விசாரணை அதிகாரியாகச் செய்யப்பட்ட நியமனமும்,

பா 4/ஹமப 10/3.

2. வைத்திலிங்கம் அரியரத்தினம் அவர்களை யாழ்ப்பாண மாவட்டத்தின் பூநகரிப் பகுதிக்கென திடீர் மரண விசாரணை அதிகாரியாகச் செய்யப்பட்ட நியமனமும்,

உடனடியாக நீக்கஞ்செய்யப்பட்டுள்ளன.

நிஹால் ஜயவிக்கிரம,
நீதிச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 20 ந உ.

3–1210—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

1973 இன் இல. 201

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

உடுதுத்திரிபிடியவில் வசிக்கும் திருமதி ரணதுங்க ஆராச்சிகே குணசீலி ஸ்வர்ண குமாரி ரணதுங்க அவர்கள் திகாரியே பிரதான அலுவலகத்தில் கம்பஹா நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு மாச்சு மீ 12 ந உ.

3–1122—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

1973 இன் இல. 202

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

தெவிநுவரவில் வசிக்கும் அகங்கம பதுகே சந்திரலதா அவர்கள் மாத்தறை பிரதான அலுவலகத்தில் மாத்தறை நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு மாச்சு மீ 12 ந உ.

3–1121—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

1973 இன் இல. 203

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

குருதெனியவில் வசிக்கும் ரணசிங்க லொகுபண்டா அமுனுகம அவர்கள் பிலிமதலாவே பிரதான அலுவலகத்தில் கண்டி நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு மாச்சு மீ 12 ந் உ.

3–1119—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

1973 இன் இல. 204

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கொழும்பு 5, திம்பிரிகஸ்யாய வீதியில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை பெனடிக்ற் அவர்கள் யாழ்ப்பாண நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில, தமிழ் பாஷைகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு மாச்சு மீ 12 ந் உ.

3–1348—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

1973 இன் இல. 205

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

முருணுவடவனவில் வசிக்கும் பதிராஜ முதியன் செலாகே திலகரத்ன பதிராஜ அவர்கள் சிலாபம் பிரதான அலுவலகத்திலும் ஆராச்சிகட்டுவே மேலதிக அலுவலகத்திலும் சிலாபம் நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு மாச்சு மீ 12 ந் உ.

3–1123—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

1973 இன் இல. 206

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

பெல்மதுளையில் வசிக்கும் உதயகீர்த்தி ரணவீர சேனநாயகா அவர்கள் குருவிட்ட வசிப்பிடத்திலும் அலுவலகத்திலும் இரத்தினபுரி நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு மாச்சு மீ 12 ந் உ.

3–1120—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல 53.

1973 இன் இல. 207

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கேகாலையில் வசிக்கும் மெனவற ஆராச்சிலாகே புஞ்சி அப்புகாமி அவர்கள் கேகாலே பிரதான அலுவலகத்திலும் மொறன்தோட்ட மேலதிக அலுவலகத்திலும் கேகாலே நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. மகாதேவா,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு மாச்சு மீ 12 ந் உ.

3–1124—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

## பதிவாளர் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 208

கீழ்க்காணும் நியமனங்கள் என்னால் செய்யப்பட்டுள்ளன :—

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள திரு. சி. சி. ரி. பொன்சேகா என்பவர் காணிப் பதிவுகாரரும், மேலதிகப் பெரும் பகுதிப் பதிவுகாரருமாக 1973 ஜனவரி 10 ந் திகதி தொடக்கம் கண்டி மாவட்டத்தில், கண்டியில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள பதிவுகாரர் திரு. எஸ். அபேவிக்கிரம என்பவர் மேலதிகப் பெரும்பகுதிப் பதிவுகாரராக 1973 ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள பதிவுகாரர் திரு. கே. டி. எஸ். குணவர்த்தன என்பவர் மேலதிக காணிப் பதிவுகாரரும், மேலதிகப் பெரும் பகுதிப் பதிவுகாரருமாக 1973 ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் குருணாகல் மாவட்டத்தில், குருணாகலில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள பதிவுகாரர் திரு. எஸ். பி. டி. ஜயசேன என்பவர் காணிப் பதிவுகாரரும், மேலதிகப் பெரும் பகுதிப் பதிவுகாரருமாக 1973 ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் அனுராதபுர மாவட்டத்தில், அனுராதபுரத்தில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள பதிவுகாரர் திரு. டபிள்யு. ஓ. எச். இந்திராரெத்தின என்பவர் காணிப் பதிவுகாரரும், மேலதிகப் பெரும் பதிவுகாரருமாக 1973 ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் நுவரெலியா மாவட்டத்தில், நுவரெலியாவில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள பதிவுகாரர் திரு. டபிள்யு. ஏ. விஜேசிறிவர்த்தன என்பவர், காணிப் பதிவுகாரரும், மேலதிகப் பெரும்பகுதிப் பதிவுகாரருமாக 1973 ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் மாத்தளை மாவட்டத்தில், மாத்தளையில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள பதிவுகாரர் திரு. என். எச். கே. ஜி. பி. டி சில்வா என்பவர் மேலதிக காணிப் பதிவுகாரராக 1973 ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள, பதிவுகாரர் திரு. ஈ. ஏ. ஆர். றனவீர என்பவர், மேலதிக காணிப்பதிவுகாரரும், மேலதிகப் பெரும் பகுதிப் பதிவுகாரருமாக 1973 ஜனவரி 1 ம் திகதி தொடக்கம், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பில் பதவி வகிப்பதற்காக.

பதிவுகாரர் சேவையில் தரம் II இல் உள்ள பதிவுகாரர் திரு. எம். ஜி. கோமஸ் என்பவர் காணிப் பதிவுகாரரும், மேலதிக பெரும் பகுதிப் பதிவுகாரருமாக 1973 ஜனவரி 10 ந் திகதி தொடக்கம் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பில் பதவி வகிப்பதற்காக.

ஹமீட் பாரூக்,
பதிவாளர் தலைமை அதிபதி.

பதிவாளர் தலைமை அதிபதியின் அலுவலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந் உ.

3–1175—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

# அரசாங்க அறிவித்தல்கள்

எல்டி—பி 7/63 ஈடி. 01/12/001

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டிறைவரிச் சட்டம்**
6 (1) (v) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால், திருத்தப்பட்ட படியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 6 (1) (v) ஆம் பிரிவின்படி, எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதி அமைச்சர் நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் விதந்துரையின் பேரில், இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள வியாபாரம் ஒவ்வொன்றிற்கும் மேற் குறிக்கப்பட்ட பிரிவு பொருந்துமென இக்கட்டளையின் மூலம் உறுதிப் படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 19 ந் உ.

**அட்டவணை**

திஸ்ஸநாயக்கா பிரெடரிக் வில்லியம் பெரேராவினால் நடாத்தப்படும் ஓரியண்ட் ஹொட்டல், பண்டாரவளை ;

சிலோன் பேப்பர் சக் தாபனத்தினால் நடாத்தப்படும் ஹொட்டல் இளப் ஓஷியாணிக், திருகோணமலை ;

இளப் ஓஷியாணிக் தாபனத்தினால் நடாத்தப்படும் ஹொட்டல் இளப் ஓஷியாணிக், கிரித்தலை ;

சிலோன் லக்ஷரி ஹொட்டேல்ஸ் தாபனத்தினால் நடாத்தப்படும் ஹொட்டல் சிகிரியா, சிகிரியா ;

வில்பத்து டுவர்ஸ் (புத்தளம்) தாபனத்தினால் நடாத்தப்படும் ஹொட்டேல் வில்பத்து, கால ஓயா ;

பாபரின் ரீவ் ஹொட்டேல் தாபனத்தினால் நடாத்தப்படும் பாபரின் ரீவ் ஹொட்டேல், பேருவளை ;

வீ ஷெல்ஸ் ஹொட்டேல் தாபனத்தினால் நடாத்தப்படும் வீ ஷெல்ஸ் ஹொட்டேல், நீர்கொழும்பு ;

நிலாவெளி பீச் ஹொட்டேல் தாபனத்தினால் நடாத்தப்படும் நிலா வெளி பீச் ஹொட்டேல், நிலாவெளி ;

மாளிகாவை டுவர்ஸ் அன்ட் எக்ஸ்போட்ஸ் தாபனத்தினால் நடாத்தப் படும் மெதலந்த டூரிஸ்ட் சென்றர் பஸ்யால ;

மாளிகாவை டுவர்ஸ் அன்ட் எக்ஸ்போட்ஸ் தாபனத்தினால் நடாத்தப்படும் கடுகண்ணாவை பாஸ் ஹொட்டேல், கடுகண்ணாவை ;

தாஸா டுவரிஸ்ட் கொம்ளெக்ஸ் தாபனத்தினால் நடாத்தப்படும் டியூரோ ஹொட்டல், பம்பலப்பிட்டி ;

கோரல் ரீவ் பீச் ஹொட்டேல்ஸ் தாபனத்தினால் நடாத்தப்படும் கோரல் ரீவ் பீச் ஹொட்டேல், ஹிக்கடுவை.

3–1365—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

எல்.டி.—பி 7/63.

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் 16 அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்**

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதியமைச்சர், நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், "ஸ்ரீகவிதாஜ வச்சிகார நினைவுச் சங்கத்தின் களுத்துறை அரசாங்க ஆஸ்பத்திரி இரத்ததான வங்கிக் கட்டிட நிதி"யை அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு மாச்சு மீ 17 ந் உ.

3–1302—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**1957 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் சட்டம்**

2 (1) ஆம் பிரிவின் கீழ் 11 ஆம் கட்டளை

1961 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, 1961 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்டபடியான 1957 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் சட்டத்தின் 2 (1) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பண்பால், நிதியமைச்சர் நாணயக்காரபத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், இலங்கை மத்திய வங்கியினால், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் வழங்கபபட வரையிலுள்ள தொகை ஐந்து கோடி ரூபாய்கள் எனவும், இவ்வித சான்றிதழ்கள் 100 ரூபாய் அல்லது 100 ரூபாய்ப் பெருக்க இனத்தில் வழங்கப்பட வேண்டும் எனவும் இக்கட்டளையினால் குறிப்பிடுகிறேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 16 ந் உ.

3–1071—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**இலங்கை அரசியலமைப்பு 1972**

119 ஆம் பிரிவின் கீழ் கையளிப்புக் கட்டளை

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க ஆகிய நான், இலங்கை அரசியல் அமைப்பின் 119 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய தொடக்கச் சம்பளத்திட்டத்திலுள்ளவர்களாய் இத்துடனுள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திணைக்களங்களில் சேவை செய்யும் அரச உத்தியோகத்தர்களை வேலை நீக்கஞ் செய்வதற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான தத்துவங்கள் யாவும், இப்போதைய இலங்கை அரசியலமைப்புக்கு முன்னிருந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்டவாறு பிற ஏற்பாடுகள் அல்லது மேலும் ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, சொல்லப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அவ்வவற்றுக்கான கையளிப்புக்கட்டளைகளிலும் விதிகளிலும் தரப்பட்டுள்ளவாறு தேவையான மாற்றங்களுடன், அதே நிபந்தனைகள், நியதிகளுக்குக் கீழ் கையளிக்கப்பட்ட தத்துவங்களாகக் கருதப்படல் வேண்டுமெனவும், பின்வரும் நிபந்தனைகட்கமைவாயிருத்தல் வேண்டுமெனவும் நான் இத்தால் கட்டளையிடுகின்றேன் :—

(அ) அத்தகைய தத்துவங்கள், இப்பொழுது ஒழுக்காற்று விதிகளுக் கிணங்கவும் அமைச்சர் சபையினால் அல்லது என்னால் காலத்துக் குக்காலம் வழங்கப்படக்கூடிய இத்தகைய மேலும் பிற அறிவுறுத்துரைகட்கிணங்கவும் பிரயோகிக்கப்படல் வேண்டும் ;

(ஆ) அரச உத்தியோகத்தர் வேலை நீக்கஞ் செய்யும் அல்லது பிற தண்டனை விதிக்கும் தத்துவம் எதனையும் அரசியலமைப்பின் 119 (1) ஆம் பிரிவின் பிரகாரம், அத்தகைய அரச உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய தண்டனைவிதிக்கும் தத்துவங்கள் என்னால் பிரயோகிக்கப்படல் வேண்டுமென நான் தீர்மானிக்கும் எவ்விடயத்திலும் பிரயோகிக்கலாகாது ;

(இ) என்னால் கையளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் வேலை நீக்கக் கட்டளை உட்பட ஒழுங்காற்று விடயம் சம்பந்தமான ஒரு கட்டளையினால் இடர்ப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அதற்கெதிராக அரசியலமைப்பில் 119 ஆம் பிரிவின் கீழ் தேவைப்பட்டவாறு அரச சேவை ஒழுக்காற்றுச்சபைக்கு அல்லது எனக்கு மேன்முறையீடு செய்யலாம்.

அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஒழுக்காற்று விதிகள் அல்லது அமைச்சரவையினால் அல்லது என்னால் வழங்கப்பட்ட பிற கட்டளைகள் அல்லது மேலுங் கட்டளைகள் ஆகியவற்றுக்கமைவாய், முன்னர்க் கூறியது போல முந்திய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்படாத ஆனால், அதனால் பிரயோகிக்கப்பட்ட வேலை நீக்கத் தத்துவங்கள், ஆண்டொன்றுக்குத் தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவுக்குக் குறைவாகப் பெறும் அரச உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக இதனகத்துள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு திணைக்களத் தலைவரினாலும் இப்பொழுது பிரயோகிக்கப்படல் வேண்டுமெனவும் நான் இத்தால் கட்டளையிடுகின்றேன்.

மைத்திரிபால சேனநாயக்க,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர்.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு,
கொழும்பு 1, 1973 ம் ஆண்டு மாச்சு மீ 16 ந் உ.

**அட்டவணை**

நீர்ப்பாசன திணைக்களம்.
பெருந்தெருக்கள் திணைக்களம்.
காணி அபிவிருத்தித் திணைக்களம்.
அரசாங்க தொழிற்சாலை.
நீர் விநியோக, வடிகாலமைப்பு திணைக்களம்.
வேலைப் பகுதி—மேற்கு பிரதேசம்.
வேலைப் பகுதி—மத்திய பிரதேசம்.
வேலைப் பகுதி—கிழக்குப் பிரதேசம்.
வேலைப் பகுதி—தெற்குப் பிரதேசம்.
வேலைப் பகுதி—வடக்குப் பிரதேசம்.
வேலைப் பகுதி—வடமேற்குப் பிரதேசம்
வேலைப் பகுதி—வடமத்திய பிரதேசம்.
வேலைப் பகுதி—ஊவா பிரதேசம்.
வேலைப் பகுதி—சப்பிரகாமுவ பிரதேசம்.

3–1245—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

ச.வ.பீ. 2/72

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டம்**

86 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் 36 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, கல்வி அமைச்சர் பதியுதீன் மஹமூத் ஆகிய நான்,

(i) விதிக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்து பட்ட வகுப்புகளுக்குப் பின்னரான பட்டங்கள் அளிக்கப்படுவதற்கான மற்ற எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ள ஆட்களுக்கு, பல்கலைக் கழகம் நிலைபெயர் காலத்தின்போது பட்டமளிப்பு விழாவொன்றினை நடாத்தாமல், பட்டவகுப்புகளுக்குப் பின்னரான பட்டங்களை அளிக்கலாமென்றும் ; அத்துடன்

(ii) பல்கலைக் கழகத் துணைவேந்தரும், பதிவாளரும் பிரதிப் பதிவாளர்களும் பழைய பல்கலைக் கழகங்களின் சார்பிலும் அவை தொடர்பாகவும் பட்டச் சான்றிதழ்களில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளனரென்றும் ;

இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

பதியுத்தீன் மஹ்மூட்,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 19 ந் வ.

3—1272—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**(அரசாங்க உத்தியோகத்தர்முன் நிறைவேற்றும்) உறுதிகளுஞ் சாதனங்களும் பற்றிய கட்டளைச்சட்டத்தின் 71 ஆம் அத்தியாயம்**

(அரசாங்க உத்தியோகத்தர்முன் நிறைவேற்றும்) உறுதிகளுஞ் சாதனங்களும் பற்றிய கட்டளைச்சட்டத்தின் 71 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சர் அவர்களால் டீ. எஸ். கோட்டகே அவர்கள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பதிவாளராகப் பதவி வகிக்கும்போது ஸ்ரீ லங்காவின் (இலங்கையின்) எல்லா நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானகப் பதவி வகிக்கும் காலத்துள் ஒப்புக்களையும் மற்றும் சாதனங்களையும் அத்தாட்சிப்படுத்துவதற்கு விசேடமான அதிகாரமுள்ள உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிஹால் ஜயவிக்கிரம,
நீதிச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 20 ந் வ.

3—1215—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்**

6 (2) ம் பிரிவுக்கமைத்த அறிவித்தல்

இதனடியிற் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை, கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயம்) 6 (1) ம் பிரிவுக்கமைய என்னால் ஆக்கப்பட்டதென 6 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய கட்டளை, 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதலாந் தேதி நடை முறைக்கு வருவதாகும்.

எம். பீ. த இசற். சிறிவர்த்தன,
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 16 ந் வ.

**கட்டளை**

1967 ம் ஆண்டு ஒகத்து மாதம் 25 ம் தேதிய 14,763 ம் இலக்கச் செய்தி மடலிற் சவுளி உற்பத்தித்தொழில் தொடர்பாகப் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, "சவுளி உற்பத்தித் தொழில்" என்பது தொடங்கி அக்கட்டளையின் இறுதிவரையுள்ள விடயக் கூறுகள் சொற்கள் ஆகிய யாவற்றுக்கும் பதிலாக, பின்வருவனவற்றை இடுவதன்மூலம் மாற்றப்படுகின்றது :—

பின்வரும் முயற்சிகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கொண்ட சவுளி உற்பத்தித் தொழில், அதாவது :—

(i) பருத்தியையும் பிற பொருள்களையும் நூலாக நூற்றல்,
(ii) நூலைப் பயன்படுத்தி நெசவு செய்தல்,
(iii) சவுளிகளைப் பூர்த்தி செய்தல்.

பின்வரும் வேலையாளரின் வேலை இதற்குட்படும் :—

1. விதைப்பருத்தி ஊட்டுவோர்.
2. விதைப்பருத்தி விநியோகிப்போர்.
3. கொட்டை நீக்கு பொறிகளுக்குப் பருத்தி ஊட்டுவோர்.
4. கொட்டை நீக்கிய பஞ்சைப் பைகளில் அடைப்போர்.
5. கொட்டை நீக்கிய பஞ்சைச் சேகரிப்போர்.
6. பருத்திக்கொட்டை சேகரிப்போரும் பைகளில் அடைப்போரும்.
7. கலக்கும் தொழிலாளர்.
8. ஒன்றுசேர்க்கும் பொறிகளுக்கு ஊட்டுவோர்.
9. பஞ்சுச் சுருள் ஏற்போர்.
10. பஞ்சுச் சுருள் சுமப்போர்.
11. நாரைச் சமாந்தரமாக்கும் பொறி இயக்குநர்.
12. எண்ணெயிடுவோர்.
13. உரிப்போர்.
14. அரைப்போர்.
15. நார் இழுக்கும் பொறிக்கு நார் இடுவோர்.
16. பஞ்சு சீவும் பொறிக்கு ஊட்டுவோர்.
17. சுருளாக்கும் பொறிக்குப் பஞ்சு ஊட்டுவோர்.
18. சீவுபொறி இயக்குநர்.
19. பஞ்சு சுற்றும் பொறி இயக்குநர்.
20. இன்டர் பொறி இயக்குநர்.
21. ரோவிங் பொறி இயக்குநர்.
22. கெண்டையகற்றும் பொறி இயக்குநர்.
23. நிரப்பிய நூற்கெண்டை சுமப்போர்.
24. நூற் கதிர்ப் பொறி இயக்குநர்.
25. வெற்றுக்கெண்டை நீக்கு பொறி இயக்குநர்
26. நாடா இணைப்போர்.
27. நூல் சுமப்போர்.
28. இராட்டினம் பழுதுபார்ப்போர்.
29. கெண்டையகற்றும் கண்காணிமார்.
30. கங்காணிமார்.
31. பெருக்குவோர் (ஆண்கள்).
32. வெற்றுக்கெண்டை சுமப்போர்.
33. நூற்கட்டை சுற்றுவோர்.
34. கழிவுப்பஞ்சுப்பொறி இயக்குநர்.
35. கழிவுப்பஞ்சு நூற்கும் பொறி இயக்குநர்.
36. நூல் பிணைக்கும் பொறி இயக்குநர்.
37. நூல் விநியோகிப்போர்.
38. இராட்டினப் பொறி இயக்குநர்.
39. நூல் சிப்பமாக்குவோர்.
40. நூல் சுற்றுபொறி இயக்குநர்.
41. நிற நூல் சுற்றுபொறி இயக்குநர்.
42. அதிவேக சுற்றுபொறி இயக்குநர்.
43. குறுக்கு நூற்கெண்டைப் பொறி இயக்குநர்.
44. நூல் சுமப்போர்.
45. பெருக்குவோர் (பெண்கள்).
46. பொருத்துவோர்.
47. பாவு சுமப்போர்,
48. பாவு சுற்றுபொறி இயக்குநர்.
49. பின்புறத்திற் கஞ்சியிடு பொறி இயக்குநர்.
50. முற்புறத்திற் கஞ்சியிடு பொறி இயக்குநர்.
51. இழை வாங்குவோர்.
52. இழைவாங்குவோரின் உதவியாளர்.
53. குறுக்கு நூல் சுற்றுவோர்.
54. நெசவாளர்.
55. இயந்திரத் தறி இயக்குநர்.
56. கண்காணிப்போர்.
57. துணி ஆய்வாளர்.
58. தையல் வேலையாளர்.
59. கழிவு நூல் பொசுக்கிக் கஞ்சியகற்று பொறி இயக்குநர்.
60. கழுவு பொறி வேலையாளர்.
61. சலவைக்கல வேலையாளர்.
62. சலவைத்தொட்டி வேலையாளர்.
63. சாயமூட்டு பொறி இயக்குநர்.
64. விரிவாக்கு பொறி இயக்குநர்.
65. உலர்த்து பொறி வேலையாளர்.
66. பளபளப்பாக்கு பொறி இயக்குநர்.
67. துணி உலர்த்தி விரிவாக்கு பொறி இயக்குநர்.
68. துணியுலர்த்திக் கஞ்சியகற்று பொறி இயக்குநர்.
69. துணியுலர்த்திப் பழுதுபார்க்கும் பொறி இயக்குநர்.
70. துணி அழுத்து பொறி இயக்குநர்.
71. மடிக்கும் பொறி வேலையாளர்.
72. மடிக்கும் ஆண்கள்.
73. மடிக்கும் பெண்கள்.

74. முத்திரையிட்டுச் சிப்பமாக்கும் ஆண்கள்.
75. மூட்டை ஆக்குதலைச் சரிபார்ப்போர்.
76. மூட்டை அமுக்கு பொறி இயக்குநர்.
77. சித்திரத் திரை அச்சுத் தயாரிப்போர்.
78. சித்திரத் திரை அச்சிடு மேற்பார்வையாளர்.
79. சித்திரத் திரை அச்சிடுவோர்.
80. சாயமூட்டிச் சலவைசெய்பொறி வேலையாளர்.
81. சாயமூட்டிச் சலவைசெய்யும் தொழிலாளர்.
82. சாயமூட்டிச் சலவைசெய்யும் தொட்டி வேலையாளர்.
83. சாயமூட்டிச் சலவைசெய்யும் தொட்டிக் கண்காணிமார்.
84. சாயக் கட்டுத்துணி தயாரிக்கும் சிறுமிகள்.
85. சவுளி உற்பத்தியில் வேலைபார்க்கும் மற்றும் தொழிலாளர் எவராயினும்.

ஆனால், பின்வரும் தொழிலாளரின் வேலை இதற்குட்பட்டதன்று :—

(அ) லிகிதர், காசாளர், பண்டசாலைப் பொறுப்பாளர், நேரக் குறிப்பாளர், காவலாளர், பராமரிப்பாளர் ;

(ஆ) 1963 ம் ஆண்டு யூன் மாதம் 29 ம் தேதி வெளிவந்த 13,690 ம் இலக்க அசாதாரண வர்த்தமானியிற் பிரசுரமான கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டோர்ப் போக்குவரத்துத் தொழிலிலுள்ள வேலையாளர் ;

(இ) 1964 ம் ஆண்டு சனவரி மாதம் 7 ம் தேதி வேளிவந்த 9,224 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரமாகி, பின்னர் மாற்றியமைக்கப்பட்ட கட்டளையிற் குறிக்கப்பட்ட இயந்திரத் தொழிலிலுள்ள வேலையாளர் ;

(ஈ) கிராமாபிவிருத்தி, சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் ஆதரவில் நடத்தப்படும் கைத்தறி, இயந்திரத் தறித் திட்டங்களில் வேலை பார்க்கும் வேலையாளர் ;

(உ) கைத்தறியாற் சவுளிகளை நெசவு செய்யும் அல்லது அத்தோடு தொடர்புபட்ட தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேலையாளர் ;

(ஊ) சவுளிகளை அச்சீடு செய்வதில் முழுவதாகவே ஈடுபட்டுள்ளவர்களால் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் நெசவுத் தொழிலுடன் தொடர்புபட்டதான தொழில் புரியும் வேலையாளர்.

3–1130—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

எல். டீ.—பீ. 207/41

**கூலி நிருணய சபைக் கட்டளைச்சட்டம்**

7 (1) ம் பிரிவின்கீழ் அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின்கீழ், மரத்தொழிலும் தச்சுத்தொழிலும் தொடர்பாய கட்டளையொன்றினை இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, தொழில் அமைச்சர் மைக்கேல் போல் த சொய்சா சிறிவர்த்தன ஆகிய யான் ஆக்கவிருக்கும் எனது கருத்தினை அக் கட்டளைச்சட்டத்தின் 7 (1) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றேன்.

உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு ஆட்சேபனைகள் 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ந் தேதி நண்பகல் 12 மணிவரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தினால் தெரிவிக்கப்படுவதோடு, அவ்வண்ணம் ஆட்சேபிப்பதற்கான நியாயங்களைக் கூறும் கூற்றொன்றையும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

எம். பி. த சட். சிறிவார்தன,
தொழில் அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு மார்ச் மீ 23 ந் உ.

**அட்டவணை**

கூலி நிருணய சபைக் கட்டளைச்சட்டத்தின் II ம் பாகத்திலுள்ள ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்குப் பொருந்துவனவாகும் :—

மரத் தொழிலும் தச்சுத் தொழிலும் பின்வரும் தொழிற்பாடுகளுள் ஏதாவது ஒன்றினையோ பலவற்றையோ கொண்டதாயிருக்கும் ; அதாவது,

(i) மரந்தறித்தல், மரங்குற்றியாக்கல், மரமரிதல், மரம் பதனிடுதல் ;
(ii) தளபாடங்கள் உற்பத்திசெய்தல் ;
(iii) மரப்பெட்டிகள் உற்பத்திசெய்தல்.

இவற்றுடன், பின்வரும் தொழிலாளர்களின் வேலைகளும் சேர்ந்தனவாயிருக்கும் :—

(1) குற்றி அரிவோர் (பொறிமுறை) ;
(2) குற்றி அரிவோர் (கை வாள்) ;
(3) மரம் அரிவோர் (கை வாள்) ;

(4) குற்றியூட்டுவோர் ;
(5) குறுக்குவெட்டுப் பணியாளர் ;
(6) கோடரிப் பணியாளர் ;

(7) குற்றி உருட்டுவோர் ;
(8) குற்றி ஏற்றுவோர் ;
(9) குற்றி நகர்த்துவோர் ;

(10) குற்றி இறக்குவோர் ;
(11) மரம் அடுக்கிவைப்போர் ;
(12) மரம் இறக்குவோர் ;
(13) மரம் ஏற்றுவோர் ;

(14) அரிந்த மரம் அடுக்கிவைப்போர் ;
(15) அரிந்த பலகை அடுக்கிவைப்போர் ;
(16) மரம் அளப்போர் ;

(17) விறகு வகைப்படுத்துவோர் ;
(18) வகைப்படுத்திய மரம் அடுக்கிவைப்போர் ;
(19) பணியாட்குழு மேற்பார்வையாளர் ;

(20) வாட் பரிகாரிகள் ;
(21) மரமுயர்த்தி இயக்குநர் ;
(22) சுதிரைவாள் இயக்குநர் ;

(23) தொழில்பயில்வோர் ;
(24) பலகை சீவுவோர் ;
(25) பலகை வெட்டுவோர் ;
(26) செவ்வை அரிவாளர் ;
(27) தூவி முனை சீவுவோர் ;
(28) அறுவணிப் பணிப்பாளர் ;

(29) பலகையமைப்போர் ;
(30) ஆணிப் பணியாளர் ;
(31) அளவரிவாளர் ;
(32) பொருத்துமுனையமைப்போர் ;
(33) முடிச்சமுத்தல் சீவுவோர் ;
(34) பலகை அளப்போர் ;

(35) அளவுமாதிரி வெட்டுவோர் ;
(36) விளிம்பு வெட்டுவோர் ;
(37) மரப்பெட்டி செய்வோர் ;
(38) தச்சர் ;
(39) மரத்துளையீட்டாளர் ;
(40) மட்டப்பணியாளர் ;

(41) சட்டகம் வெட்டுவோர் ;
(42) அலங்கார மாதிரி வெட்டுவோர் ;
(43) இணைப்போர் ;
(44) தளபாடம் செய்வோர் ;
(45) கதவு, யன்னற் சட்டம் வெட்டுவோர் ;
(46) விசித்திரப் பொருள் செய்வோர் ;
(47) பேழை செய்வோர் ;

(48) கண்ணடி பொருத்துவோர் ;
(49) மெத்தை செய்வோர் ;
(50) மெருகிடுவோர் ;
(51) மணல் மெருகூட்டுவோர் ;
(52) மட்டமாக்குவோர் ;

(53) துணிவெட்டுவோர் ;
(54) மெத்தைவகை செய்வோர் ;
(55) பிரம்பு பின்னுவோர் ;
(56) திறனில் தொழிலாளர் ;
(57) காவற்காரர் ;

(58) பின்வரும் தொழிலாளர்களைத் தவிர்த்து, மரத்தொழிலிலும் தச்சுத் தொழிலிலும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் தொழிலாளர் பிறர் :—

(அ) எழுதுவினைஞர், காசாளர், பண்டசாலைப் பொறுப்பாளர், நேரங்குறிப்பவர், பாதுகாப்பாளர் ;

(ஆ) 1963 ம் ஆண்டு யூன் மாதம் 29 ந் தேதிய 13,690 ம் இலக்க அதிவிசேட செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டோர்ப் போக்குவரத்துத் தொழிலிலுள்ள தொழிலாளர் ;

(இ) 1944 ம் ஆண்டு சனவரி மாதம் 7 ந் தேதிய 9,224 ம் இலக்கச் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்டுப் பின்னதாகத் திருத்தப்பட்ட கட்டளையிற் குறிக்கப்பட்ட பொறியியற்றொழிலிலுள்ள தொழிலாளர்கள்.

3–1364—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

### கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 9ம் பிரிவின்படி, பராமரிப்பு இல்லத் தொழில் தொடர்பான கூலி நிருணய சபையிலே தொழில் வழங்குவோர் பிரதிநிதியாகவிருந்த கலாநிதி இராசதுரை இரத்தினம் அவர்களுக்குப் பதிலாகத் திரு. பி. மகேசரத்தினம் அவர்களைத் தொழில் அமைச்சரவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1971 ம் ஆண்டுக் கூலி நிருணய சபை ஒழுங்கு விதிகளின் 30 ம் ஒழுங்கு விதிக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ மாச்சு ௴ 15 ந் ௳.

3-1075—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

எஸ்.டி.—பி. 69/30

### கடற்றொழில் கட்டளைச் சட்டம்

(212 ம் அத்தியாயமான) கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் 20(11) ஆம் 33 ஆம் பிரிவுகளினால் கடற்றொழில் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவராலாக்கப்பட்டு சொல்லப்பட்ட கட்டளை சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் தேசிய அரசு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஜோர்ச் ராஜபக்ஷ,
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு.
1973 ம் ௵ மார்ச் ௴ 19 ந் .

#### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1973 ஆம் ஆண்டின் பாக்குடா மீன்பிடி ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், திருகோணமலையில் (சல்லித்துறை பிரதேசத்தைத் தவிர்த்து இதனகத்தின்மேல் " பாக்குடா மீன்பிடிப் பிரதேசம் " எனக் குறிக்கப்படும் " பாக்குடா " என அழைக்கப்படும் இதற்கான அட்டவணை அ வில் விபரிக்கப்பட்டதுமான இலங்கை நீர்ப் பகுதிகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இதற்கான அட்டவணை ஆ வில் விபரித்துள்ள கடற்கரை விழும்பின் நீள்பத்திற்கு அடுத்துள்ள பாக்குடா பிரதேசப் பகுதியில் " கரைவலை" எனப்படும் வலையொன்றினால் ஆளெவரும் மீன்பிடித்தலாகாது.

4. ஒழுங்குவிதி 3 இல் குறிக்கப்பட்ட பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பாக்குடாப் பிரதேசத்தில் உள்ளூர் மீனவரொருவரைத் தவிர வேறு எம்மீனவரும் இயந்திர மீன்பிடி வள்ளமொன்றை நங்கூரமிட்டு வைத்தலாகாது.

5. உள்ளூர் மீனவரல்லாத ஒவ்வொரு மீனவரும், பாக்குடாவுக்குள் நீண்டிருக்கும் குழாய்ப் பாதைக்கு வடக்கேயுள்ளதும், இதற்கான அட்டவணை ஆ வில் விபரித்துள்ள பிரதேசத்திற்கு வடக்கே அமைந்ததுமான பிரதேசத்தில் மட்டும் தனது இயந்திர மீன்பிடி வள்ளத்தை நங்கூரமிட்டு வைத்தல் வேண்டும்.

6. பாக்குடா மீன்பிடி பிரதேசத்திற்குள்—

(அ) கரைவலை அல்லது தூண்டில் வகையாலல்லாது எவரேனும் மீன்பிடித்தலாகாது, அத்துடன்

(ஆ) ஓர் உள்ளூர் மீனவராயிருந்தாலொழிய ஆளெவரும் கரைவலை அல்லது தூண்டில் கொண்டு மீன்பிடித்தலாகாது.

7. ஒழுங்குவிதி 6 இல் உள்ளதனைப் பொருட்படுத்தாது, இருநூற்று ஐம்பது பேருக்கு அதிகப்படாத உள்ளூர் மீனவரல்லாத மீனவர், பணிப்பாளரால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றதன்மேல் தூண்டில் மூலம் பாக்குடா மீன்பிடிப் பிரதேசத்தில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

8. ஓர் உள்ளூர் மீனவரல்லாத ஆள் எவரேனும் 'பணிப்பாளர் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரிடமிருந்து அந்நோக்கத்திற்காக வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டையுடையவராயிருந்தாலொழிய—

(அ) மீன்பிடிப்பதற்காகப் பாக்குடாவிலிருந்து மீன்பிடி வள்ளத்தினை உபயோகித்தலாகாது, அல்லது

(ஆ) பாக்குடா மீன்பிடிப் பிரதேசத்துக்கு அருகிலுள்ள கடற்கரையில் மீன்களை இறக்குதலாகாது அல்லது இப்பிரதேசத்திலிருந்து மீன்களை வெளியே கொண்டு செல்லுதற்காகப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளங்களைக் கரைக்கேற்றுதலாகாது, அல்லது

(இ) பாக்குடாப் பிரதேசத்திற்கு வெளியே மீன்களைக்கொண்டு செல்லுவதற்காகப் பாவிக்கப்படும் எந்த மீன்பிடி வள்ளங்களையும் ஒழுங்குவிதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தில் நங்கூரமிடலாகாது.

9. ஒழுங்குவிதி 8 இன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை, திருகோணமலை நிருவாக மாவட்ட அரசாங்க முகவரின் ஆலோசனையுடன் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

10. ஒழுங்குவிதி 7 அல்லது 8 இன் கீழ் அனுமதிச்சீட்டைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும், இதற்கென பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் அந்நோக்கத்துக்காக அவரால் குறிக்கப்பட்ட திகதியன்றோ அதற்கு முன்னரோ எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

11. ஒழுங்குவிதி 7 இன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு ஒவ்வொன்றும்—

(அ) பொருளளவில் இதற்கான அட்டவணை இ இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைதல் வேண்டும் ; அத்துடன்

(இ) முன்பு நீக்கப்படாவிடின், அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்ட அத்தகைய காலம் வரை வலுவுள்ளதாயிருத்தல் வேண்டும்.

12. ஒழுங்குவிதி 8 இன் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அனுமதிச் சீட்டும்—

(அ) பொருளளவில் இதற்கான அட்டவணை ஈ இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைதல் வேண்டும் ; அத்துடன்

(இ) முன்பு நீக்கப்படாவிடின், அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்ட அத்தகைய காலம் வரை வலுவுள்ளதாயிருத்தல் வேண்டும்.

13. கரைவலை கொண்டு மீன்பிடிக்கையில் இழுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய வலையின் இரண்டு நுனிகளும் கரைக்குக் கொண்டுவரப்பட்ட பின்பு, இக்கரைவலையால் சூழப்பட்ட பிரதேசத்தில் ஆளெவரும் மீன்பிடிப்பதற்காகத் தூண்டில் அல்லது வேறு வலையைப் பாவிக்கவோ ஏதாவது மீன்பிடி வள்ளங்களைத் தொழிற்படச் செய்யவோவாகாது.

14. சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தலாகாது நின்றுவொழிய இவ்வொழுங்கு விதிகளில் "பணிப்பாளர்", " மீன் ", "எடு", " இலங்கை நீர்ப்பரப்பு " போன்ற சொல்லமைப்புகள் (212 ஆம் அத்தியாயமானது) கடற்றொழில் கட்டளைச் சட்டத்தில் உள்ள அதே பொருள்களையே முறையே கொண்டிருத்தல் வேண்டும் ;

" உள்ளூர் மீனவர் " என்பது பாக்குடாவிற்கு அருகில் உள்ள பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர் எனப் பொருள்படும் ; அத்துடன்

" சலித்துறை மீன்பிடிப் பிரதேசம் " என்பது பின்னர் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் சலித்துறை மீன்பிடி ஒழுங்கு விதிகளுக்கான அட்டவணை அ, ஆ என்பனவற்றில் குறிப்பிடப்பட்ட சலித்துறை மீன்பிடிப் பிரதேசங்கள் அ, ஆ எனப் பொருள்படும்.

#### அட்டவணை அ

பாக்குடா மீன்பிடி பிரதேசம்

எலிசபெத் முனையிலிருந்து தென்கிழக்குப் பக்கமாக, எம். எஸ். பி. 86. இ. பி. யின் மேற்கெல்லையின் நீட்டிய பாகத்தை இடையில் வெட்டும் வரைக்கும், பின்னர், மேற்சொல்லப்பட்ட நீட்டிய பாகத்தின் தென் மேற்குப் பக்கமாகவும், மேற்சொல்லப்பட்ட எம். எஸ். ஓ. வின் மேற்கு எல்லையூடாக பாக்குடா முற்கடற்கரைக்கும், பின்னர் மேற்சொல்லப்பட்ட முற்கரையினூடாக வடமேற்கு, வடக்கு, வடகிழக்குப் பக்கமாக, உப்பு ஏரியின் போக்குவாயைக் கடந்து இப்பிரதேசத்தின் தொடக்க முனையையடையும் வரையும் கீறப்பட்ட ஒரு நேர்க் கோட்டால் எல்லைப்படுத்தப்பட்ட பிரதேசம்.

#### அட்டவணை ஆ

கந்தளாய் கற்பாறையிலிருந்து 106 அடி மேற்குப்பக்கமாகவும், கட்டப்பட்ட விமானத் தாக்கற் காப்பிடத்தின் வடகிழக்கு மூலையிலிருந்து 44 அடி வடகிழக்குப் பக்கமாகவும், கட்டப்பட்ட வடிகாலின்மீதுள்ள அடையாளத்திலிருந்து வடமேற்கில் கீறப்பட்ட நேர்க்கோடொன்றினால் 84 அடியாகவுள்ளதும், கடற்கரைப் பிள்ளையார் ஒழுங்கையின் தெற்குப் பக்க மூலையின் நில எல்லைக் குறியைச் சந்திக்கும்வரை கிட்டத்தட்ட 2000 அடி முற்கடற்கரைப் பக்கமாகத் தென்கிழக்குப் பக்கமாக ஒரு முனையை அடைவதுமான எல்லைவரை கீறப்பட்ட ஒரு நேர்க்கோட்டால் எல்லைப்படுத்தப்பட்ட பிரதேசம்.

அனுமதிச்சீட்டு இல.

**அட்டவணை இ**

**அனுமதிச்சீட்டுப் படிவம்**

1. ..............................................இல் வசிக்கும் ...................................................... 1973 ஆம் ஆண்டின் பாக்குடா மீன்பிடி ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை அ வில் குறிக்கப்பட்ட பாக்குடா மீன்பிடிப் பிரதேசம் என்று குறிக்கப்பட்டுள்ள நீரகத்தே தூண்டில் கொண்டு மீன்பிடிக்க இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2. இந்த அனுமதிச்சீட்டு, முன்பு நீககப்படாவிடின்.............. வரை செல்லுபடியாதல் வேண்டும்.

3. மேற்சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும், கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் இந்த அனுமதிச்சீட்டு அமைந்ததாயிருத்தல் வேண்டும் :—

(i) இந்த அனுமதிச்சீட்டின் கீழ் மீன்களை எடுப்பதற்கு இந்த அனுமதிச்சீட்டையுடையவர் தூண்டிலை விட வேறெந்த முறையையும் பயன்படுத்தலாகாது.

(ii) அனுமதிச்சீட்டையுடையவர் இந்த அனுமதிச்சீட்டை வேறெவரேனுக்கும் மாற்றலாகாது.

கடற்றொழில் பணிப்பாளருக்காக.

திகதி

**அட்டவணை ஈ**

**அனுமதிச்சீட்டுப் படிவம்**

1. அனுமதிச் சீட்டு இல :———
2. அனுமதிச்சீட்டுடையவரின் பெயம், முகவரியும் :————.
3. இந்த அனுமதிச்சீட்டின் கீழ் பாவிக்கப்படும் மீன்பிடி வள்ளத்தின் வகை :——
4. வள்ளத்தின் பதிவு எண :————.
5. இயந்திரத்தின் எண :————.
6. இயந்திரத்தின் மாதிரி :————.
7. வள்ளச்சாலே இல. (இயந்திர வள்ளமாயின்) :————.
8. இந்த அனுமதிச்சீட்டின் கீழ் பாவிக்கப்படக்கூடிய உபகரணங்களின் வகை :————.
9. மேற்கூறப்பட்ட அனுமதிச்சீட்டை உடையவர் இந்த அனுமதிச் சீட்டினுல் கீழ்வருவனவற்றிற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளார்—

(i) 1973 ஆம் ஆண்டின் பாக்குடா மீன்பிடி ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை அ வில் குறிக்கப்பட்ட பாக்குடா மீன்பிடிப் பிரதேச வெளிப்புறத்தே மீனபிடிப்பதற்காகப் பாக்குடாவை உபயோகிப்பதற்கும் ;

(ii) பாக்குடா மீன்பிடிப் பகுதிகளுக்கு அருகில் உள்ள கடற்கரையில் மீன்களை இறக்குவதற்கும் இந்நீர்களிலிருந்து மீன்களை வெளியே கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது மீன்பிடி வள்ளங்களைக் கரையேற்றுவதற்கும் ;

(iii) கீழே குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய, பாக்குடாப் பிரதேசத்திற்கு வெளியே மீன்களைக் கொண்டு செல்வதற்காகப் பாவிக்கப்படும் எந்த மீன்பிடி வள்ளங்களையும், 1973 ஆம் ஆண்டின் பாக்குடா மீன்பிடி ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 5 இல் குறிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் நங்கூரமிடுவதற்கும்.

10. ................ இலிருந்து ................வரை இந்த அனுமதிச்சீட்டு வலுவுடையதாய் இருத்தல் வேண்டும்.

————.

கடற்றொழில் பணிப்பாளருக்காக.

அனுமதிச்சீட்டு வழங்கப்பட்ட திகதி :—

**நிபந்தனைகள்**

(1) அனுமதிச்சீட்டு உடையவர் பாக்குடா மீன்பிடிப் பிரதேசத்துக்குள் மீன்களை எடுத்துச் செல்லாகாது.

(2) அனுமதிச்சீட்டு உடைவர் அவரது அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்ட வகையைவிட வேறெவ்வித மீன்பிடி வள்ளம் அல்லது மீன்பிடி உபகரணங்களைப் பாவிக்கலாகாது.

(3) அனுமதிச்சீட்டை உடையவர் அனுமதிச்சீட்டு நோக்கத்துக்காகப் பாவிக்கப்படும் மீன்பிடி வள்ளத்தின மீது பதிவு இலக்கத்தைப் பதிவு செய்வித்தல் வேண்டும்.

(4) அனுமதிசசீட்டை உடையவர் அவரது அனுமதிச்சீட்டை வேறெருவருக்கும் மாற்றுதலாகாது.

(5) எந்த ஒரு சமாதான அலுவலரினுல் அனுமதிச்சீட்டைப் பரிசோதிக்க வேண்டப்படுமிடத்து அனுமதிச்சீட்டையுடையவர் அதனைக் கொடுத்தல் வேண்டும்.

(6) அனுமதிச்சீட்டை உடையவர் பாக்குடா மீன்பிடிப் பிரதேசத்துக்குள் கரைவலை மீன்பிடித் தொழிற்பாடுகளோடு எந்த விதத்திலும் தலையிடலாகாது.

(7) 1973 ஆம் ஆண்டின் பாக்குடா மீன்பிடி ஒழுங்குவிதியின் ஒழுங்குவிதி 5 இல் குறிக்கப்பட்ட பிரதேசத்தைவிட வேறு எந்த இடத்திலும் அனுமதிச்சீட்டை உடையவர் தமது வள்ளத்தை நங்கூரமிடலாகாது.

3–1181—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

எல். டி.—பி 69/30.

**கடற்றொழில் கட்டளைச் சட்டம்**

(212 ஆம் அத்தியாயமான) கடற்றொழில் கட்டளைச்சட்டத்தின் 20 (11) ஆம் 33 ஆம் பிரிவுகளின் பிரகாரம், கடற்றொழில் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அவராலாக்கப்பட்டு தேசிய அரசுப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

ஜோர்ஜ் இராஜபக்ஸ,
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 19 ந உ.

**பிரமாணங்கள்**

1942 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ந் திகதிய 9,053 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களால் திருத்தப்பட்டபடியான 1941 ஆம் ஆண்டு செப்தெம்பர் யாதம் 26 ந் திகதியின 8,796 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான, 1941 ஆம் ஆண்டின் சல்லித்துறை மீன்பிடிப் பிரமாணங்கள், மீண்டும் பின்வருமாறு இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றன :—

1. பிரமாணம் 3 (அ) வில்—

(அ) " உதவி அரசாங்க அதிபர் என்றுல், உதவி அரசாங்க அதிபர், திருகோணமலை " என்னும் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக " உதவி அரசாங்க அதிபர் என்றுல் அரசாங்க அதிபர், திருகோணமலையையும் உள்ளடக்கியுள்ளது." என்னும் வரைவிலக்கணத்தைச் சேர்த்தல் மூலமும் ;

(ஆ) கடைசி வரைவிலக்கணத்திற்குப் பின் உடனே கீழ்வரும் புதிய வரைவிலக்கணங்களைச் சேர்த்தல் மூலமும் :—

" கரைவலை " எனப்படுவது இரு தொங்கல்களையும் கடற்கரையிலிருந்து பிடிக்கக்கூடிய அல்லது இழுக்கக்கூடிய முறையில் நீரினுள் விடப்படும் கரைவலையும், முறையே, கம்பான், கரைவலை, சல்வா மாடியா போன்ற மூன்று கூறுகளாற் செய்யப்பட்டுள்ளதுமாகும். " அடசுவலை " கூறுகளாற் செய்யப்பட்டுள்ளதுமாகும்.

" அடசுவலை " என்பது இரு தொங்கல்களையும் கடற்கரையிலிருந்து பிடிக்கக்கூடிய அல்லது இழுக்கக்கூடிய முறையில் நீரினுள் விடப்படும் கரைவலையும், முறையே கம்பான், திருச்சான் அடசுவலை போன்ற மூன்று கூறுகளாற் செய்யப்பட்டுள்ளதுமாகும் ; முடிக்கு முடி இழுத்து கோணுகோணமாக அளவிடும்போது அடசுவலைக் கண்கள் நீளத்தில் 2 அங்குலத்திற்குக் குறையாமல் காணப்படுகிறது.

2. பிரமாணம் 4 இல், பந்தி (ஆ) விற்குப் பின் உடனே கீழ்வரும் புதிய பந்தியைச் சேர்த்தல் மூலமும் :—

" (இ) திருகோணமலை நகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் ஒரு தீவிர மீனவரல்லாதவரும், கடற்றொழில் கட்டளைச்சட்டத்தின் கீழுள்ள பிரமாணங்களின் உடன்பாட்டுடன் பதியப்பட்ட ஒரு வள்ளத்திற்கு அல்லது மீன்பிடிக் கலத்திற்கு உடைமையாளராகவும் உள்ளவர்க்கு ஒரு அனுமதிச் சீட்டு வழங்கப்படுதல். "

3. (அ) பிரமாணம் 5 ஐ, பிரமாணம் 5 (1) என திரும்ப எண்ணிடுதல் மூலமும் ;

(ஆ) திரும்ப எண்ணிட்ட பிரமாணம் 5 (1) இல் " பிரதேசம் பீ க்குள் ஒரு நபரும்................ " என்ற சொற்களைச் சேர்த்தல் மூலமும்.

4. திரும்ப எண்ணிட்ட பிரமாணம் 5 (1) க்குப் பின் உடனே இந்தப் புதுப் பந்தியைப் புகுத்தல் மூலமும் :—

" (2) பிரதேசம் பீ க்குள், எவ்வருடத்திலும் ஏப்ரல் 1 ந் தேதி தொடக்கம் செப்தெம்பர் 30 ந் தேதி மட்டும்—

(அ) ஒருவரும் கரைவலை அல்லது தூண்டில் கயிறு அல்லது கைவலையால் மட்டுமன்றி மற்றைய கருவிகளாற் மீன் பிடிக்கப்படாது ; இக்கயிறு அல்லது கைவலை கடற் கரையிலிருந்து அல்லது பாறைகளிலிருந்து வீசப்பட வேண்டும், அல்லது எவ்வள்ளத்திலிருந்தோ அல்லது மீன்பிடிக் கலத்திலிருந்தோ வீசப்படும் தூண்டில் கயிறு கொண்டு பிடிக்கலாம்.

(ஆ) அரசாங்க அதிபரால் இதற்கென வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டு இல்லாதவர்கள், கரைவலை கொண்டோ அல்லது வள்ளத்திலிருந்து அல்லது மீன்பிடிக் கலத்திலிருந்து வீசப்படும் தூண்டில் கயிறு கொண்டோ மீன்பிடிக்கப்படாது. "

" (3) அட்டவணை " ஏ " யில் விபரிக்கப்பட்ட " பீ " பகுதியில் அடசுவலைகள் உபயோகிக்கும் குழுவினரை அல்லது இப் பிரமாணங்கள் நடைமுறைக்கு வரும் சந்தர்ப்பத்தில் உயர்ந் தப்பாடுப் பகுதியிலே கரைவலைகள் உபயோகிக்கும் குழுவினரைத் தவிர எவரேனும் சல்லித்துறை " பீ " பகுதியில் அடசுவலையையோ அல்லது கரைவலையையோ உபயோகிக்கக் கூடாது. ஆனால், உரிமையாளிகள் அல்லது வழிவந்தோர் அல்லது நியமிக்கப்படுவோர் அத்தகைய வலைகளைப் பாவிக்க உரிமை அற்றவர்கள் ஆவர்.

5. பிரமாணம் 6 இல்—

(அ) பந்திகள் (1) லும் (5) லும் உள்ள " 4 (ஆ) பிரமாணத்திற்குக் கீழ் அல்லது பிரமாணம் 5 (ஆ) " எனும் சொற்களுக்குப் பதிலாக " 4 (ஆ), 5 (1) (ஆ) அல்லது 5 (2) (ஆ) பிரமாணத்திற்குக் கீழ் " என்ற சொற்களைச் சேர்த்தல் மூலமும் ;

(ஆ) பந்தி (2) க்குப் பின் உடனே கீழ்க்காணும் நிபந்தனைகளைப் புகுத்தல் மூலமும் :—

" பிரமாணம் 4 (ஆ) வின் கீழ் உத்தரவு ஆணைச் சீட்டிற்கான ஒவ்வொரு விண்ணப்பமும்—

(i) விண்ணப்பதாரி திருகோணமலை நகரசபை எல்லைக்குள் தற்சமயம் வதிபவர் என, விண்ணப்பதாரி வதியும் பிரதேசத்தில் உள்ள கிராம சேவகரால் கையொப்பமிடப்பட்ட ஒரு உறுதியுரையுடனும் ;

(ii) விண்ணப்பதாரி ஒரு தீவிர மீனவர் என்றும், கடற்றொழில் கட்டளைச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டு குறிக்கப்பட்ட ஒரு மீன்பிடிக் கலத்திற்கு சொந்தக்காரரென்றும் அப்பிரதேசத்தில் உள்ள கடற்றொழில் பரிசோதகரால் கையொப்பமிடப்பட்ட ஒரு உறுதியுரையுடனும் "

இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. பிரமாணம் 7 இல்—

(அ) பந்திகள் (1) லும், (4) லும் உள்ள, " பிரமாணம் 5 (இ) யின் கீழ் " என்ற சொற்களுக்குப் பதிலாக " பிரமாணம் 5 (1) (இ) யின் கீழ் " என்ற சொற்களைச் சேர்த்தல் மூலமும் ;

(ஆ) (i) பந்திகள் (2) ஐயும் (3) ஐயும் பந்திகள் (3) ம் (4) மாக திரும்ப எண்ணிடுதல் மூலமும் ;

(ii) திரும்ப எண்ணிடப்பட்ட பந்திகள் (3) லும் (4) லுமுள்ள " பந்தி (1) க்குக் கீழ் " என்ற சொற்றொடருக்குப் பதிலாக " பந்திகள் (1), (2) க்குக் கீழ் " என்ற சொற்றொடரைச் சேர்த்தல் மூலமும் ;

(இ) (i) பந்தி (4) வினை, பந்தி (5) ஆக மாற்றி எண்ணிடுதல் மூலமும் ;

(ii) மாற்றி எண்ணிடப்பட்ட பந்தி (5) லுள்ள, " 5 (இ) பிரமாணத்திற்குக் கீழ் " என்ற சொற்களுக்குப் பதிலாக " 5 (1) (இ) பிரமாணத்திற்குக் கீழ் " என்ற சொற்களைச் சேர்த்தல் மூலமும் ;

(ஈ) பந்தி (1) க்குப் பின் உடனே கீழ்வரும் புதிய பந்தியைப் புகுத்துதல் மூலமும் ;

" (2) பிரமாணம் 5 (2) (ஆ) விற்குக் கீழ் ஒரு அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும், பெப்ரவரி 15 ந் தேதியிலிருந்து மார்ச்சு 1 ந் தேதி வரைக்குமான கால எல்லைக்குள் அரசாங்க அதிபருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிப்பதோடு தமது கரைவலையையும் அரசாங்க அதிபரின் பரிசோதனைக்காக, அவரால் இதற்கென குறிக்கப்பட்ட தேதியன்று சமர்ப்பிக்கவேண்டும். "

(உ) பந்தி (5) க்குப் பின் உடனே பின்வரும் புதிய பந்தியைப் புகுத்தல் மூலமும் :—

" (6) விண்ணப்பதாரரால் பாவனை செய்யவிருக்கும் கரைவலையானது அரசாங்க அதிபரால் பரிசோதனை செய்து அவ்வலை நல்ல நிலையிலுள்ளதென்றும், பாவனைக் குகந்ததென்றும் அவர் திருப்தியடைந்தாலன்றி ஒரு விண்ணப்பதாரருக்கும் பிரமாணம் 5 (2) (ஆ) க்குக் கீழ் ஒரு அனுமதிச் சீட்டும் வழங்கப்படமாட்டாது. "

7. (i) பிரமாணம் 8 ஐ, பிரமாணம் 8 (1) ஆக மாற்றி எண்ணிடுதல் மூலமும் ;

(ii) மாற்றி எண்ணிடப்பட்ட 8 (1) ம் பிரமாணத்திற்குப் பின் உடனே கீழ்வரும் புதிய பந்திகளைப் புகுத்தல் மூலமும் ;

" (2) கரைவலை கொண்டு பிரதேசம் பீ யில் மீன்பிடிப்பதை ஒவ்வொரு கிழமையும், போயா நாட்களும் உட்பட ஏதாவது 4 நாட்களுக்கு மட்டுப்படுத்துவதோடு எவ் வள்ளத்திலிருந்தோ அல்லது மீன்பிடிக் கலத்திலிருந்தோ வீசப்படும் தூண்டில் கயிறு கொண்டு மீன்பிடிப்பதை மற்றய 3 நாட்களுக்கு ஒவ்வொரு கிழமையும் மட்டுப்படுத்தப்படும். "

" (3) இந்நாட்கள் குறிக்கப்பட்டு அதறகான அறிவிப்பு பந்தி (1) இல் குறிக்கப்பட்ட விதத்தில் தெரிவிக்கப்படுதல் வேண்டும். "

8. பிரமாணம் 9 (1) இல்—

" பிரமாணம் 4 (ஆ) அல்லது பிரமாணம் 5 (ஆ) க்குக் கீழ் " என்ற சொற்றொடருக்குப் பதிலாக, பிரமாணங்கள் 4 (ஆ), 5 (1) (ஆ) அல்லது 5 (2) (ஆ) க்குக் கீழ் " என்ற சொற்றொடரைச் சேர்த்தல் மூலமும் ;

9. பிரமாணம் 10 (1) இல்—

(i) " பிரமாணம் 4 (ஆ), பிரமாணம் 5 (ஆ), அல்லது பிரமாணம் 5 (இ) க்குக் கீழ் " என்ற சொற்றொடருக்குப் பதிலாக, " பிரமாணம் 4 (ஆ), பிரமாணம் 5 (1) (ஆ) அல்லது பிரமாணம் 5 (1) (இ) க்குக் கீழ் " என்ற சொற்றொடரைச் சேர்த்தல் மூலமும் ;

(ii) " தலைமைக்காரன் " என்ற சொல்லுக்குப் பதிலாக " கிராம சேவகர் " என்ற சொல்லைச் சேர்த்தல் மூலமும் ;

10. அட்டவணை பீ க்குப் பின் உடனே கீழ்க்காணும் புதிய அட்டவணையையும் சேர்த்தல்.

அட்டவணை இ

சல்லித்துறை பிரதேசம் " பீ " யில் அடசுவலையால் மீன்பிடிக்கும் குழுவினர்கள்

| | உடைமையாளரின் பெயர் | கூறுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாயவர் கோடிலிங்கம் .. | .. |
| 2. | ரீ. முத்துத்தம்பி .. | .. |
| 3. | செல்லையா மணியம் .. | .. |
| 4. | எம். மகாலிங்கம் .. | .. |
| 5. | எஸ். மகாலிங்கம் .. | .. |

3-1180—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

## இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர் இரத்தினசிறி விக்கிரம நாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1971 ஒற்றோபர் மாதம் 15 ஆந் தேதிய 14,980 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 6 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்திலுள்ள பிலியந்தலை பட்டினசபைப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. பிலியந்தலை, மொறட்டு வீதி, இல. 98 ஐச் சேர்ந்த பம்ப ரெந்தகே தொன் பந்துசேன அவர்கள்.
2. பிலியந்தலை, சோமவீர சந்திரசிறி மாவத்தை இல. 78 ஐச் சேர்ந்த ஜொகென்னஸ் ஜீ. ஆரியத்திலக அவர்கள்.
3. பிலியந்தலை, மாம்பை, "அனோமா" ஐச் சேர்ந்த தர்ம சேன டீ. லொகுகே அவர்கள்.
4. பிலியந்தலை, மாம்பை, "மானெல்" ஐச் சேர்ந்த எஸ். டீ. குணரத்தின அவர்கள்.
5. பிலியந்தலை, மாம்பை, இல. 320 ஐச் சேர்ந்த ரிச்சட் த கொஸ்தா அவர்கள்.
6. பிலியந்தலை, மிரிஸ்வத்தை, இந்திரா ஒளிப்படச் சாலையைச் சேர்ந்த தொன் தேசிஸ் லொகுகே அவர்கள்.
7. பிலியந்தலை, பாக் வீதி இல. 4/41 ஐச் சேர்ந்த வோல்ரர் ஜே. திலகரத்தின அவர்கள்.
8. பிலியந்தலை, சரணபால மாவத்தை இல. 44 ஐச் சேர்ந்த ஜயசிங்க ஆரச்சிகே ஆனந்த ஜயசிங்க அவர்கள்.
9. பிலியந்தலை, பள்ளிக்கூட ஒழுங்கை இல. 23 ஐச் சேர்ந்த பீ. டீ. சய்மன் அவர்கள்.
10. பிலியந்தலை, தும்போவிலை, சோமவீர சந்திரசிறி மாவத்தை இல. 133 ஐச் சேர்ந்த கே. டீ. எல். பெரேரா அவர்கள்.
11. பிலியந்தலை, தேவானந்த மாவத்தை இல. 120 ஐச் சேர்ந்த எம். டீ. குணசேன அவர்கள்.
12. பிலியந்தலை, ரேகா ஒளிப்படச் சாலையைச் சேர்ந்த அசோக பீ. மெதவத்த அவர்கள்.
13. பிலியந்தலை, மொறட்டுவை வீதி "சந்தன" ஐச் சேர்ந்த தொன் ஜேமிஸ் கட்டுவாவல அவர்கள்.
14. பிலியந்தலை, மொறட்டுவை வீதி இல. 47, "கமணி" ஐச் சேர்ந்த டபிள்யு. தர்மசேன அவர்கள்.
15. பிலியந்தலை, மஹரகமை வீதி இல. 13 ஐச் சேர்ந்த பாகொட ஆரச்சிகே தொன் வில்மன் அவர்கள்.
16. பிலியந்தலை, மாம்பை, பால்கஹபொக்குணை வீதியைச் சேர்ந்த சூரிய ஆரச்சிகே அமரதுங்க அவர்கள்.
17. பிலியந்தலை, சோமவீர சந்திரசிறி மாவத்தை இல. 88 ஐச் சேர்ந்த மலகலகே தொன் யசரத்தின அவர்கள்.
18. பிலியந்தலை, மஹரகமை வீதி "சந்தபஹத" ஐச் சேர்ந்த கோவிந்த வடுகே தொன் வின்சன்ற் சோமபால அவர்கள்.
19. பிலியந்தலை, பழைய வீதி இல. 20 ஐச் சேர்ந்த மிரிகமகே ஜினதாச அவர்கள்.
20. பிலியந்தலை, மாம்பை, மடபாத வீதி இல. 36 ஐச் சேர்ந்த டீ. டீ. விக்கிரமரத்தின அவர்கள்.

(ஆ) பிலியந்தலை, மொறட்டு வீதி இல. 98 ஐச் சேர்ந்த பம்பரெந்தகே தொன் பந்துசேன அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவ ராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 23 ந உ.

3–1367/1—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1),3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 செற்றம்பர் மாதம் 8 ஆந் தேதிய 24 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 27 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட குருணாகலை மாவட்டத்தி லுள்ள எகெட்டுவெவைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. எகெட்டுவெவையைச் சேர்ந்த பஸ்நாயக்க முதியன்சேலாகே அமரசிங்க பஸ்நாயக்க அவர்கள்
2. எகெட்டுவெவை சந்திரா ஸ்ரோர்சைச் சேர்ந்த தசநாயக்க முதி யன்சேலாகே அப்புகாமி அவர்கள்
3. எகெட்டுவெவை, கித்தேவையைச் சேர்ந்த கிட்டிகாமி முதியன்சே லாகே பிங்காமி அவர்கள்
4. ஏகெட்டுவெவை, கித்தேவையைச் சேர்ந்த கிட்டிகாமி முதியன்சே லாகே முதியன்சே புஞ்சிபண்டா அவர்கள்
5. எகெட்டுவெவை, கித்தேவையைச் சேர்ந்த கிட்டிகாமி முதியன்சே லாகே ரங்காமிகே டிங்கிரிபண்டா அவர்கள்
6. நெகம்பகா, குடாகன்னேருவையைச் சேர்ந்த கிட்டிகாமி முதியன் சேலாகே முதியன்சே ஏகநாயக்க அவர்கள்
7. மியகலேவை, வெலியாவையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியன்சே லாகே டிங்கிரிபண்டாகே ரங்காமி அவர்கள்
8. கிராதலானை, கட்டுகம்பலமையைச் சேர்ந்த டபிள்யு. எம். டீ ரம்பண்டா அவர்கள்
9. எகெட்டுவெவை, விகாதெனிகமையைச் சேர்ந்த எச். எம். கபுருபண்டா அவர்கள்
10. எகெட்டுவெவை, கதுருவெவையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியன் சேலாகே பண்டாகே அப்புகாமி அவர்கள்
11. எகெட்டுவெவை, மகுலேவையைச் சேர்ந்த எஸ். எம். ஏ. சுத்தகாமி அவர்கள்
12. எகெட்டுவெவை, மகுலேவையைச் சேர்ந்த டபிள்யு. எம். ரிகிரிபண்டா அவர்கள்
13. எகெட்டுவெவை, மகுலேவையைச் சேர்ந்த தசநாயக்க முதியன்சே லாகே பண்டாரநாயக்க அவர்கள்
14. எகெட்டுவெவை, கல்கடவளையைச் சேர்ந்த இற்றிகாமி முதியன்சே லாகே ரிகிரிபண்டா அவர்கள்
15. கல்கமுவை, அத்தரகல்லையைச் சேர்ந்த எம். எம். பதிராஜா அவர்கள்
16. எகெட்டுவெவை, ரத்தினதிவுல்வெவையைச் சேர்ந்த ஜீ. பீ. எல். கிரியா அவர்கள்
17. எகெட்டுவெவை, நிதலவையைச் சேர்ந்த டி. எம். சிறிசேன அவர்கள்
18. எகெட்டுவெவை, கலபிற்றகமையைச் சேர்ந்த டபிள்யு. எம். கே. வேலப்பு அவர்கள்
19. எகெட்டுவெவை, திவுல்கனேயைச் சேர்ந்த கோரத் முதியன்சேலாகே கோரத்காமிகே பியதாச அவர்கள்
20. கோன்வெவை, அங்கமுககுவையைச் சேர்ந்த எம். எம். அபுசாலி அவர்கள்
21. எகெட்டுவெவை, நிகோகமையைச் சேர்ந்த எச். எம். பீ.புஞ்சிரால அவர்கள்
22. எகெட்டுவெவை, வல்பாலுவத்தையைச் சேர்ந்த டபிள்யு. எம். ஆர். கோரத்பண்டா அவர்கள்

23. எகெட்டுவெவை, மேல் எபோகமையைச் சேர்ந்த ஆர். எம். கே புஞ்சிரால அவர்கள்

24. எகெட்டுவெவை, மேல் எபோகமையைச் சேர்ந்த ஆர். எம். கருணரத்தின் அவர்கள்

25. எகெட்டுவெவை, மேல் எபொகமையைச் சேர்ந்த டபிள்யு. எம்.கே. முதியஞ்சே அவர்கள்

(ஆ) எகெட்டுவெவைச் சேர்ந்த பஸ்நாயக்க முதியஞ்சேலாகே அமரசிங்க பஸ்நாயக்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராக விருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 மாச்சு 23 ஆம் நாள்.

3–1367/2—30.03.73 ந. திகதிய வர்த்தமானி இல. 53

---

**இணக்கச் சபைகள் சட்டம்**

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1), என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 செற்றெம்பர் மாதம் 8 ஆந் தேதிய 24 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 6 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்திலுள்ள கெகனதுறைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

(1) நாவிமனை, திவியாகஹ, போதிருக்காராமவாசியாகிய சங்கைக்குரிய திவியாகஹ விபுலதிஸ்ஸ தேரோ அவர்கள்
(2) கெகனதுறை, பரவாகெர வேலுவனாராம வாசியாகிய சங்கைக்குரிய கலகம சந்தானந்த தேரோ அவர்கள்
(3) கெகனதுறை, மொட்டாகெதரை, மகாகெதரவத்தையச் சேர்த தர்மசேன தேவசுரேந்திர அவர்கள்
(4) கெகனதுறை, பரவாகெரை, "உமாலி" ஐச் சேர்ந்த உபேசிங்க ஆரச்சிகே உபசேன அவர்கள்
(5) கெகனதுறை, "சோமசிறியா" ஐச் சேர்ந்த கொகாவலி பதிரணகே குணசேகர அவர்கள்
(6) தீயகஹ, "அசோகா" ஐச் சேர்ந்த தர்மசேன தஹநாயக்க அவர்கள்
(7) தீயகஹ, இரிமகெதரையைச் சேர்ந்த வேபதயிர மஹநெகதிகே பீரிஸ் அவர்கள்
(8) கெகனதுறை, ஜுல்காவத்தையைச் சேர்ந்த தொன் அந்திரயஸ் மெகெல்கொட விதாரன அவர்கள்
(9) கெகனதுறை, "குணநிவச" ஐச் சேர்ந்த மத்தும லியனகே சிறிசேன அவர்கள்
(10) தீயகஹ, வாடியவத்தையைச் சேர்ந்த கங்கானம் பதிரணகே ஜினதாச அவர்கள்
(11) கெகனதுறை, பரவாகெரை, "சங்கீதா" ஐச் சேர்ந்த ஆரியசேன பொலதுகொடவடுகே அவர்கள்
(12) கெகனதுறை, கொகாவளை, "சமன்" ஐச் சேர்ந்த மொதரவானே சிறிசேன முணசிங்க அவர்கள்
(13) நாவிமனை, தீயகஹ, கெதரவத்தரவளவ்வைச் சேர்ந்த திமீ விக்கிரமரத்தின பண்டாரநாயக்க அவர்கள்
(14) கெகனதுறை, மொட்டாகெதரை ஆயுள்வேத மருந்துச் சாலையின் வைத்தியர் பியசேன குணவர்த்தன அவர்கள்
(15) கெகனதுறை, பரவாகெரையைச் சேர்ந்த ஆரியரத்தின சமரசிங்க அவர்கள்
(16) கெகனதுறை, பரகாலந்தையைச் சேர்ந்த விதாரண கமகே சந்திரசிறி ஜயதுங்க அவர்கள்
(17) கெகனதுறை, கொகாவளை, மாத்தறகெதரையேச் சேர்ந்த மெண்டிஸ் கிரும்பர லியனகே அவர்கள்
(18) கெகனதுறை, மொட்டாகெதரை, வெலிகொடை விளையாட்டரங்கைச் சேர்ந்த தொன் ஜோனிஸ் அரிச்சந்திர அவர்கள்
(19) கெகனதுறை, பரவாகெரையைச் சேர்ந்த உபேசிங்க ஆரச்சி கெய் சாமெல் அவர்கள்
(20) கெகனதுறை, பரவாகெரை, கின்ஸ்லூட்வத்தையைச் சேர்ந்த கேவா மத்துமலியனகே அல்விஸ் டயஸ் அவர்கள்
(21) கெகனதுறை, திவெல்வத்தையைச் சேர்ந்த சீதாவக கமகே நந்திசேன ராஜசிங்க அவர்கள்
(22) கெகனதுறை, மொட்டாகெதரை, "கலாகெத" ஐச் சேர்ந்த அபேசிறி நாராயன சமரபால வனிகரத்தின அவர்கள்
(23) கெகனதுறை, பரவாகெரையைச் சேர்ந்த திப்பல காமாச்சிகே பியசேன அவர்கள்
(24) நாவிமனை, தீயகஹ, தீயகஹ மேற்கைச் சேர்ந்த விதான கமகே தயானந்த அவர்கள்
(25) கெனதுறை, முல்லெவத்தையைச் சேர்ந்த பியசேன தஹநாயக்க அவர்கள்
(26) கெகனதுறை, சுபசாதக மாவத்தை இல. 421 ஐச் சேர்ந்த பொடியப்புகாமி கெட்டியாரச்சி அவர்கள்
(27) கெகனதுறை, நுகாவத்தையைச் சேர்ந்த தொன் அரனோலிஸ் விதாரண அவர்கள்
(28) கெகனதுறை, பரவாகெரையைச் சேர்ந்த கேவா மினுவன் தெனியகே சமரவீர அவர்கள்

(ஆ) கெகனதுறை, மொட்டாகெதரை, மகாகெதரவத்தையைச் சேர்ந்த தர்மசேன தேவசுரேந்திர அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973, மாச்சு 23 ஆம் நாள்.

3–1367/3—30.03.73 ந திகதிய வர்த்தமானி இல. 53

---

**இணக்கச் சபைகள் சட்டம்**

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 ஒற்ரோபர் மாதம் 23 ஆந் தேதிய 14,929 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 1 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு மாநகர சபையின் 44 ஆம் வட்டாரம்—கிரில்லப்பனைப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. கொழும்பு 5, பூர்வாராம மாவத்தை இல. 97/6 ஐச் சேர்ந்த ரிச்சட் பெரேரா அமரதுங்க அவர்கள்.
2. கொழும்பு 5, கிருலப்பனை மாவத்தை இல. 40 ஐச் சேர்ந்த ஆர். எல். விஜேசூரிய அவர்கள்.
3. கொழும்பு 5, கிருலப்பனை மாவத்தை இல. 36 ஐச் சேர்ந்த எஸ். பீ. விஜேகுணவர்த்தன அவர்கள்.
4. கொழும்பு 5, கிருலப்பனை மாவத்தை இல. 74 ஐச் சேர்ந்த ஜீ. ஐ. சரணபால அவர்கள்.
5. கொழும்பு 5, கிருலப்பனை, பூர்வாராம வீதி இல. 133 ஐச் சேர்ந்த எம். அபேசிறி த கொஸ்தா அவர்கள்.
6. கொழும்பு 5, கிருலப்பனை, ஸ்ரீ சித்தார்த்த இடம் இல. 44/15 ஐச் சேர்ந்த எம். டபிள்யு. சிறிசேன அவர்கள்.

7. கொழும்பு 5, கிருலப்பனை மாவத்தை இல. 22/14 ஐச் சேர்ந்த எ. எல். வீ. அபேரத்தின அவர்கள்.
8. கொழும்பு 5, கிருலப்பனை, சோமாதேவி இடம் இல. 26/9 ஐச் சேர்ந்த சுமித் கேவாவசம் அவர்கள்.
9. கொழும்பு 5, மாயாமாவத்தை இல. 177 ஐச் சேர்ந்த யூ. பிரேமதாச அவர்கள்.
10. கொழும்பு 5, கிருலப்பனை மாவத்தை இல. 53/7 ஐச் சேர்ந்த கே. டீ. தர்மசேன அவர்கள்.
11. கொழும்பு 5, கிருலப்பனை, தலகொட்டுவவத்தை இல. 4/95 ஐச் சேர்ந்த எ. ஜீ. பிரேமதாச அவர்கள்.
12. கொழும்பு 5, கிருலப்பனை, புகையிரத நிலைய வீதி இல. 41/13 ஐச் சேர்ந்த டபிள்யு. ஜீ. பியதாச அவர்கள்.
13. கொழும்பு 5, பொல்கேன்கொடை வீதி இல. 237/81 ஐச் சேர்ந்த கேரகலகே தொன் பவிலஸ் அவர்கள்.
14. கொழும்பு 5, கிருலப்பனை மாவத்தை 1 ஆம் மாவத்தை இல. 2 ஐச் சேர்ந்த தந்திரிகே ஹர்பட் பெட்ரிக் ருபேரு அவர்கள்.
15. கொழும்பு 5, பூர்வாராம வீதி இல. 156 ஐச் சேர்ந்த எச். டபிள்யு. மெண்டிஸ் அப்பு அவர்கள்.
16. கொழும்பு 5, கிருலப்பனை, பொல்கேன்கொடை வீதி இல. 197 ஐச் சேர்ந்த ஜே. ராஜகருணு அவர்கள்.
17. கொழும்பு 5, புகையிரத நிலைய வீதி இல. 23/34 ஐச் சேர்ந்த வீரய்யா சிதம்பரம் சிவசாமி அவர்கள்.
18. கொழும்பு 6, எட்மன்ரன் வீதி இல. 53 ஐச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்தம்பு பொன்னையா அவர்கள்.
19. கொழும்பு 6, ஹைலெவல் வீதி இல. 173 ஐச் சேர்ந்த ரத்நாயக்க முதியன்சேலாகே பண்டார மெணிக்கே அவர்கள்.
20. கொழும்பு, ஹைலெவல் வீதி இல. 191/4 ஐச் சேர்ந்த டக்ளஸ் ஜோசப் பேலின் அவர்கள்.
21. கொழும்பு 5, பொல்கேன்கொடை வீதி இல. 218/15 ஐச் சேர்ந்த சேனுதீரகே ஜஸ்ரின் பீரிஸ் அவர்கள்.
22. கொழும்பு 5, பூர்வாராம வீதி இல. 100 ஐச் சேர்ந்த கிரன்கொட கமகே கருணாரத்தின அவர்கள்.
23. கொழும்பு 5, பொல்கேன்கொடை வீதி இல. 237/5 ஐச் சேர்ந்த பொல்வத்தகே ஜேமிஸ் கோமஸ் அவர்கள்.
24. கொழும்பு 6, கிருலப்பனை, புகையிரத நிலைய வீதி இல. 29/47 ஐச் சேர்ந்த என். ரொமியல் அல்மேதா அவர்கள்.
25. கொழும்பு 6, கிருலப்பனை, ஹைலெவல் வீதி இல. 59/1 ஐச் சேர்ந்த குருப்புகே தொன் ஜயசேன அவர்கள்.
26. கொழும்பு 5, கிருலப்பனை, ஸ்ரீ சித்தார்த்த இடம் இல. 21 ஐச் சேர்ந்த டபிள்யு. டீ. பிரேமதாச அவர்கள்.
27. கொழும்பு 6, பூர்வாராம மாவத்தை இல. 43/52 எ ஐச் சேர்ந்த எ. ஆர். ரத்நாயக்க அவர்கள்.
28. கொழும்பு 5, புகையிரத நிலைய வீதி இல. 58/37 ஐச் சேர்ந்த பியதாச ராஜபக்ச அவர்கள்.
29. கொழும்பு 5, அதுல இடம் இல. 12 ஐச் சேர்ந்த கோனு பதிரகே ஜோசப் கல்தேரா அவர்கள்.
30. கொழும்பு 5, சீபல் மாவத்தை இல. 19 ஐச் சேர்ந்த பொல்வத்தகே அசோகா பெரேரா சேனாரத்தின அவர்கள்.
31. கொழும்பு 5, கிருலப்பனை, புகையிரத நிலைய வீதி இல. 41/32 ஐச் சேர்ந்த கே. டீ. சய்மன் அவர்கள்.

(ஆ) கொழும்பு 5, பூர்வாராம மாவத்தை இல. 97/6 ஐச் சேர்ந்த ரிச்சட் பெரேரா அமரதுங்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 23 ந் உ.

3-1367/4—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1971 திசம்பர் மாதம் 30 ஆந் தேதிய 14,991 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 17 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தொடம்பைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

(1) தொடம்பை, அதிகாரியைச் சேர்ந்த எல். வீ. வீரவர்த்தன அவர்கள்
(2) தொடம்பையைச் சேர்ந்த முணசிங்க ஆரச்சிலாகே ஆனந்தபால ஜயவர்த்தன அவர்கள்
(3) தெப்பனுவை, மெதகமையைச் சேர்ந்த வை. சேதிரிஸ் அவர்கள்
(4) தொடம்பை, கொரகயெலையைச் சேர்ந்த மொரமுதலிகே கழுமஹத்மயா அவர்கள்
(5) தொடம்பை, கொரகயெலையைச் சேர்ந்த கந்தபாங்கொட மெதியஸ் பீரிஸ் அவர்கள்
(6) தொடம்பை, கொலிப்பிட்டியைச் சேர்ந்த மெரஞ்ஞகே பிரேமசிறி அவர்கள்
(7) தொடம்பை, அதிகாரியைச் சேர்ந்த அமரதுங்க எப்ரகம் சிஞ்ஞோ அவர்கள்
(8) தொடம்பை, கொரகயெலையைச் சேர்ந்த எம். எ. குணவர்த்தன அவர்கள்
(9) தொடம்பை, கொரகயெலையைச் சேர்ந்த ஆர். ரீ. பியசேன அவர்கள்
(10) தொடம்பை, துங்னெதகேனையைச் சேர்ந்த எச். வீ. சோமபால அவர்கள்
(11) தொடம்பை, மன்டாதெனியாவைச் சேர்ந்த பீ. எமிஸ் சிஞ்ஞோ அவர்கள்
(12) கஹங்கமை, கெற்றலியன்பள்ளையைச் சேர்ந்த பீ. கே ஜானிஸ் சிங்களகொட அவர்கள்
(13) இரத்தினபுரி, தேவாலேகாவையைச் சேர்ந்த லிஸ்பன் சமரக்கோன் அவர்கள்
(14) இரத்தினபுரி, இ/கஹங்கமை வித்தியாலயத்தைச் சேர்ந்த ஈ. பீ. தனபால அவர்கள்
(15) தொடம்பை, கல்பையைச் சேர்ந்த டீ. குணசீல அவர்கள்
(16) கஹங்கமை, கொஸ்கலையைச் சேர்ந்த எ. சனீ வீரசிங்க அவர்கள்
(17) தெப்பனுவை, மெதகமையைச் சேர்ந்த எல். கே. மாட்டின் சிஞ்ஞோ அவர்கள்
(18) தொடம்பை, கொரகயெலையைச் சேர்ந்த எச். ரீ. பீரிஸ் சிஞ்ஞோ அவர்கள்
(19) தொடம்பை, கொலிப்பிட்டியைச் சேர்ந்த பீ. ஜயநேரிஸ் அவர்கள்
(20) தொடம்பை, மில்லகடையைச் சேர்ந்த கே. வீ. புத்ததாச அவர்கள்
(21) தொடம்பை, அதிகாரியைச் சேர்ந்த எல். வீ. எப்ரகம் அவர்கள்
(22) தொடம்பை, நாகொடையைச் சேர்ந்த டீ. எம். காமினீ சலமன் அவர்கள்
(23) தொடம்பை, மில்லகடையைச் சேர்ந்த வெத்தசிங்க புஞ்சி சிஞ்ஞோ அவர்கள்
(24) தொடம்பை, மின்னகடையைச் சேர்ந்த கே. வீ. திலகரத்தின அவர்கள்

(ஆ) தொடம்பை, அதிகாரியைச் சேர்ந்த எல். வீ. வீரவர்த்தன அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973, மாச்சு 23 ஆம் நாள்.

3-1367/5—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

### இணக்கச் சபைகள் சட்டம்

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரம நாயக்க ஆகிய யான் 1971 மே மாதம் 7 ஆந் தேதிய 14,957 ஆம் இலக்கக் கசெற்றறிவித்தல் மூலம் குருணகலை மாவட்டத்திலுள்ள பன்னகலைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவராகவிருந்து, அப்பதவியிலிருந்து விலகிய வடமுன்னேகெதரை, கந்தானேகெதரையைச் சேர்ந்த ஐயத்திலக கிட்டிகாமி அப்புகாமில்லாகே தொன் மயூரானந்த ஐயத்திலக அவர்களுக்குப் பதிலாக பன்னலை, கொரவடுன்னேயைச் சேர்ந்த சிறிவர்த்தன முதியன்சேலாகே சிறிசேன அவர்களை இக்குழாத்தின் உறுப்பினராக இருக்கும் காலத்துள் இக்குழாத்தின் தலைவராகவுமிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

ஆர். விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 23 ந் உ.

3–1366—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

## நானாவித அறிவித்தல்கள்

### வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவுப் பெரும்பாகக் கச்சேரிப் பிரிவில் 1973 ல் கால்நடைகளுக்குக் குறிசுடும் அட்டவணை

1962 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20 ம் திகதி தமிழில் பிரசுரிக்கப்பட்ட 13,406 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கால்நடைகளுக்குக் குறிசுடுதல் சம்பந்தமாக 12 (III) ம் ஒழுங்கு விதிப்படி வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவு பெரும்பாகக் கச்சேரிப் பிரிவில் கால்நடைகளுக்குக் குறிசுடும் கால அட்டவணை பொது சனங்கள் அறிவதற்காகக் கீழே பிரசுரிக்கப்படுகின்றது :—

வவுனியா கச்சேரி,
வவுனியா, 1973 ம் ஆண்டு மார்ச் மீ 10 ந் உ.

எல். பி. விக்கிரம ஆராச்சி,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

| கி. சே. பிரிவு இலக்கம் | கிராம சேவகர் பிரிவும் குறிசுடும் இடமும் | குறிசுடும் திகதி |
|---|---|---|
| 245 | கொக்குத்தொடுவாய் கிராம சேவகர்கந்தோர் வளவு | 23.4.73, 24.4.73, 2.5.73, 5.6.73 |
| | கருநாட்டுக்கேணி கிராம முன்னேற்றச்சங்க வளவு | 23.4.73, 30.4.73, 9.5.73, 6.6.73, 6.7.73 |
| | அக்கரைவெளி பொருளாதார அபிவிருத்திசங்கக் கட்டட வளவு | 9.4.73, 26.4.73, 15.5.73 |
| | அல்மீனியக் கூட்டுத்தாபனக் கட்டட வளவு—ஆலங்குளம் | 3.5.73, 23.5.73, 4.6.73 |
| | மயில்வாகனம் மாட்டுக்காலை | 10.4.73, 24.5.73, 14.6.73 |
| 235 | கொக்கிளாய் கிராமசேவகர் கந்தோர் வளவு | 28.4.73, 7.5.73, 18.6.73, 2.7.73 |
| 238 | முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் காரியாலய வளவு | 26.4.73, 28.5.73, 25.6.73, 2.7.73 |
| | கிராம முன்னேற்றச் சங்கம்—சிலாவத்தை | 28.4.73, 11.5.73, 18.6.73, 3.7.73 |
| | சின்னத்தாங்காடு சந்தி | 25.4.73, 29.5.73, 25.6.73, 9.7.73 |
| 230 | முள்ளியவளை கிராமச் சபைக்கந்தோர் | 2.5.73, 5.6.73, 2.7.73, 3.7.73 |
| | வற்றாப்பளை பலநோக்கக் கூட்டுறவுச்சங்க வளவு | 3.5.73, 28.5.73, 18.6.73, 2.7.73 |
| 232 | தண்ணியூற்று கிராம சேவகர் வளவு | 7.5.73, 8.5.73, 18.6.73, 19.6.73, 3.7.73 |
| 234 | குமுளமுனை கொட்டுக்கிணத்தடி வயல் | 3.5.73, 28.5.73, 2.7.73 |
| | செம்மலை கிராம முன்னேற்றச் சங்க வளவு | 2.5.73, 29.5.73, 9.7.73 |
| | அளம்பில் கிறீஸ்து கோயில் | 30.4.73, 23.5.73, 16.7.73 |
| | ஆண்டான்குளம் ஐயனார் கோயில் வளவு | 7.5.73, 4.6.73, 3.7.73 |
| | தண்ணிமுறிப்பு இராசசிங்கம் வளவு | 8.5.73, 18.6.73 |
| 240 | முள்ளிவாய்க்கால்—வட்டுவாசல் | 28.5.73, 4.5.73, 16.7.73 |
| | பதிவுகாரர் வீடு—வெள்ளாமுள்ளிவாய்க்கால் | 29.5.73, 4.6.73 |
| | கிராம முன்னேற்றச் சங்க வளவு—கரையாமுள்ளிவாய்க்கால் | 30.5.73, 9.7.73 |
| 242 | அம்பலவன்பொக்கனை அரசாங்க பாடசாலை | 23.5.73, 28.5.73, 11.6.73, 9.7.73 |
| | பழமாத்தலன் | 21.5.73, 4.6.73, 9.7.73 |
| | துரைசிங்கம் வளவு | 29.5.73, 12.6.73, 16.7.73 |
| | பழமாத்தலன் அரசினர் பாடசாலை | 30.5.73, 25.6.73, 24.7.73 |

3–1085—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

### ஆள்புல சிவில் வேலைப் பகுதி

பிரிவு : டொம்பே. பிராந்தியம் : மேற்கு

01.04.73 ல் இருந்து பப்பிலியவல மீதிரிகல வீதியில் உள்ள ⅞ வது பாலம் திருத்த வேலைகளுக்காக போக்குவரத்து, மேல் அறிவித்தல் வரும் வரைக்கும் மூடப்பட்டிருக்குமென பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இதற்குப் பதிலாக பொதுமக்கள் பள்ளிகம, மிறிகல பாதையையே போக்குவரத்திற்காகப் பாவிக்கலாம்.

என். பி. எ. விஜயசேகர,
வேலைப் பணியாளர்,
மேற்குப் பிராந்தியம்.

ஆள் புல சிவில் வேலைப் பகுதி,
மேற்குப் பிராந்தியம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 20 ந் உ.

3–1301—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிட்டப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | 05.01.73 | வெள்ளி | 29.12.72 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.01.73 | வெள்ளி | 05.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.01.73 | வெள்ளி | 12.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.01.73 | வெள்ளி | 19.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| பெப்புருவரி | 02.02.73 | வெள்ளி | 26.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 09.02.73 | வெள்ளி | 02.02.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 15.02.73 | வியாழன் | 09.02.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.02.73 | வெள்ளி | 15.02.73 | வியாழன் | ந.ப. 12.00 |
| மாச்சு | 02.03.73 | வெள்ளி | 23.02.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 09.03.73 | வெள்ளி | 02.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.03.72 | வெள்ளி | 09.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.03.73 | வெள்ளி | 16.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.03.73 | வெள்ளி | 23.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் | 06.04.73 | வெள்ளி | 30.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11.04.73 | புதன் | 06.04.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.04.73 | வியாழன் | 11.04.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.04.73 | வெள்ளி | 19.04.73 | வியாழன் | ந.ப. 12.00 |

எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.